



# ஞானச்சுடர்

## மலர்

மார்கழி 1999




வெளியீடு

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறள் வழி

" தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. "

பொருள்:-

காலம் பிந்தி செய்வதை அவ்வாறே செய்து உடன் செய்யவேண்டியதை விரைவில் செய்குக.

# பாராட்டு வைபவம்

ஞானச்சுடர் தனது மூன்றாவது ஆண்டில் காலடி வைக்கவுள்ளது.

ஞானச்சுடர் என்ற இந்த ஆத்மீகக் குழந்தையை வளர்த்தெடுப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் சுடருக்கு ஆக்கங்களை வழங்கிய சமயப்பெரியோர்களும், அறிஞர் பெருமக்களுமாவர்.

இந்தவகையில் இந்த சமயப் பெரியோர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்து அவர்களைப் பராட்டுகின்ற நிகழ்வு புத்தாயிரமாம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஞானச்சுடரின் 3-வது ஆண்டு முதல்மலர் வெளியீட்டின் பொழுது இடம்பெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இவ்விழாவில் அன்புள்ளம் கொண்ட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பேரவையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 24

1999 மார்கழி

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 1 - 5 |
| 2) | இறை வழிபாட்டுக்குரிய மார்கழி மாதம் | 6 - 7 |
| 3) | திருநாவுக்கரசர் கூறும் ஐந்து உண்மைகள் | 8 - 11 |
| 4) | உயர்திரு செல்லப்பா சுவாமியார் | 12 - 13 |
| 5) | பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் | 14 - 15 |
| 6) | சந்நிதியான் தெய்வீக நினைவுப் பாமாலை | - 16 |
| 7) | சிவலிங்க ஸ்வரூபத்தின் இரகசியம் | 17 - 19 |
| 8) | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் | 20 - 21 |
| 9) | வந்தி | 22 - 26 |
| 10) | பிறவிப்பிணி தீர்க்கும் மருந்து | 27 - 29 |
| 11) | மறுவில் கற்பின் வாணுதல் கணவன் | 30 - 32 |
| 12) | சந்நிதியான் | 33 - 35 |
| 13) | பண்டிதமணி கணபதிப்பிள்ளை ........ | 36 - 38 |
| 14) | ஞானச்சுடரில் மலரும் மரபுக் கவிதைகள் | 39 - 40 |
| 15) | ஞானபண்டித கலாவித்தகி | 41 - 45 |
| 16) | திருவாசக விழாப் போட்டியில் வெற்றியீட்டியோர் | - 46 |
| | மாணவர் பக்கம்: | |
| 17) | சங்கம வழிபாடு | 47 - 48 |
| 18) | Easy Way to Learn English (Part-23) | 49 - 50 |


அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 365/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்"
## கார்த்திகை மாத வெளியீடு

அறிமுகவுரை :-

கார்த்திகை மாதத்திற்கான வெளியீட்டுரையை இலங்கைவங்கி பருத்தித்துறைக்கிளையில் கடமையாற்றுகின்ற திரு. ப. ஆனந்தநடேசன் அவர்கள் மேற்கொண்டார்கள். இன்று வாழ்க்கை அநித்தியமானது என்பதை எல்லோரும் உணரக்கூடிய வகையில் சமகாலநிகழ்வுகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்தநிலையில் எமது மண்வாசனையுடன் ஆத்மீகம்சார்ந்ததாக வெளிவந்துகொண்டிருக்கின்ற ஞானச்சுடர் எம்மை மேலும் இறைநம்பிக்கையுள்ளவர்களாக ஆக்கிக்கொண்டிருப்பது என்பதை திரு. ஆனந்தநடேசன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

இளம் சமுதாயத்தினரையும் நாட்டம் கொள்ளச்செய்யும் வகையில் இதிகாசக் கதைகளையும், மற்றும் மாணவர்பக்கத்தையும் தாங்கி வருவதும் பாராட்டப்படவேண்டிய விடயம் என்பதை எடுத்துக் கூறினார்கள்.

மதிப்பீட்டுரை :-

மலருக்கான மதிப்பீட்டுரையை ஓய்வுபெற்ற ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபரும், கவிஞர் திரு. சோ. பத்மநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

எமது பகுதியிலிருந்து ஆத்மீக சஞ்சிகையாக ஞானச்சுடர் வெளிவந்து கொண்டிருப்பது எமக்கெல்லாம் பெருமையைப் பெற்றுத்தருகின்றது என்பதை தனது ஆரம்ப உரையில் திரு. பத்மநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஞானச்சுடரில் மிகவும் தரமான ஆக்கங்கள் வெளிவந்து கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டிய புலவர் அவர்கள் எமது மக்களை ஆத்மீக ரீதியில் விளிப்படையக்கூடிய கருத்தாளம் நிறைந்தவையாக அவை இருப்பதையும் சபையில் உள்ளோருக்கு எடுத்துக்கூறினார்கள்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமரபுகளிலும் தமக்குள்ள புலமைகளையும், ஆத்மீகத்துறையில் தமக்குள்ள ஈடுபாட்டையும் ஒருங்கிணைத்து இரத்தினச்சுருக்கமாகச் சுடர் தொடர்பான தமது மதிப்புரையை நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதி

செல்வச் சந்நிதியானே!
உன் சந்நிதித்தானத்தில்
உருகாத உள்ளமும் உருகிடுமே
கர்ப்பூர ஒளியினிலே கந்தனின் காட்சி
நெஞ்சங்களை நிறைத்திடுமே
வானையும் நிலத்தையும் இணைப்பது போன்ற
கர்ப்பூரப் புகை
மயில் வாகனனின் மாயமன்றோ.
அன்று கதிர்காமருக்குக் காட்சிகொடுத்த
பூவரச மரம்
அற்புதத்தைக் காண்பித்து நிற்குமே.
தேனும் தினைமாவும் பிடித்த
வள்ளியம்மனுக்கு
நேர்த்திகள் வைத்துச்
சுடர் விடும் மாவிளக்குகள்
பரவசத்தில் ஆழ்த்திடுமே
அறுபத்து மூன்று ஆலயிலையில்
அமுது படைக்கும் சிறப்பும்
ஆனந்தமுடன் நாம் காணும் காட்சிகளே
எக்காலமும் அன்னம் வழங்கியுமே
அடியார்கள் பசியைப் போக்கியுமே
அருள் புரியும் அன்னதானக் கந்தன்
பக்தர்கள் இளைப்பாறிடப்
பரந்த மடங்கள் உதவிடுமே.
அடியார்கள் நேர்த்தி நிறைவேற்றிட,
பசி. தாகம் போக்கிட
ஆரோக்கிய மளித்திடும்
சந்நிதியான் ஆச்சிரமமே.
கலை பண்பாடு வளர்த்திடும்
அற்புதங்கள் நிகழ்ந்திடும்
பக்தி மார்க்க நிலையமாம்
சந்நிதியான் ஆச்சிரமமே
ஞானச்சுடர் வழியாக
ஞானத்தை வெளிப்படுத்திடுமே.

ஆக்கம்:

திருமதி வசந்தா கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. தியாக. சோமஸ்கந்தராஜாக் குருக்கள்
( ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி )

திரு. ந. துரைராசா J. P.
( அல்வாய் )

திரு. பொ. தர்மலிங்கம்
( பத்திரிகை முகவர், உடுப்பிட்டி )

திரு. மா. பாலேந்திரம்
( ஆசிரியர், வதிரி அல்வாய் )

திரு. மு. நவரெத்தினம்
( வீரப்பராயன், கரணவாய் தெற்கு )

Dr. வே. கணேசவேல்
( அல்வாய் )

தலைவர்
( மாணிக்க இடைக்காடர் ச. ச. நி., இடைக்காடு )

திரு. பொ. துரைராசா
( அல்வாய் )

திரு. கந்தசாமி
( பலசரக்கு மாளிகை, சங்கானை )

திரு. க. இரத்தினசிங்கம் J. P.
( கிராம உத்தியோகத்தர், கரணவாய் மத்தி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நிகழும் 07 - 01 - 2000 இல் பவளவிழாக் காணும்

## ஞானபண்டித கலாவித்தகி, சிவத்தமிழ்ச்செல்வி,

## கலாநிதி, பண்டிதை

# தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை

# வாழ்த்திய வாழ்த்திதழ்

( வெண்பா )

பவள விழாக்காணும் பண்டிதைதங் கம்மா
நலநல பேறுகள் நன்றாய் - உலப்பிலே
ஆதர வாய்த்தொண்டு ஆர்ந்து சிறந்தே
போதகவாய் வாழ்க மிக.

( பல்லவி )

வாழ்த்துகின்றோம் சிவத் தமிழ்ச் செல்வியை
வாழிய நீடூழி வாழி பெரிதெனவே

( வாழ்த்துகின்றோம் )

( அநுபல்லவி )

துர்க்கா துரந்தரியாய்ச் சேவையும் மிகவாகத்
அரியா நீதநிலைப் பேரின்பம் துய்த்து நிற்போய்,

( வாழ்த்துகின்றோம் )

( சரணம் )

ஞான பண்டித கலாவித் தகியாக
ஞால முழுவதிலும் நற்கீர்த்தி பரப்பிநிற்போய்
கானமயில் வாகனன் கடம்பன் கருணையினால்
காலங்களின் தெய்வீகம் காசினி காணவைப்போய்.

( வாழ்த்துகின்றோம் )

யாழ்ப்பல் கலைக்கழகக் கலாநிதி விருதுபெற்றே
யாழிசை எனவாக நின்புகழ் பரப்பிநிற்போய்
வாழ்வின் இலட்சியத்தை பண்புடன் கண்டுணர
மனம்மொழி மெய்யெல்லாம் அர்ப்பண மாக்கிநிற்போய்.

( வாழ்த்துகின்றோம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாநின் கையிருப்ப அமுத சுரபியதோ
அல்லது சிந்தா மணியோவென் றதிசயிக்க
அம்பாள் துர்க்காவின் அருளினால் ஆற்றிநிற்போய்
ஆயிரம் பிறைகாண அகவைவிஞ்சி வாழியவே.

( வாழ்த்துகின்றோம் )

ஜென்மமிதிற் பேரின்பம் நுகர்ஜீவ முத்தரெனத்
தெய்வீகம் மிகவாகச் ஜெகதலம் போற்றவுள்ளோய்
அன்பும் இரக்கமும் அருளுமிங்கு ஓங்கிடவே
அனைத்து இன்பமும் மகிழுமிங் கமைவாக.

( வாழ்த்துகின்றோம் )

வேண்டுவன யாவுமருள் கற்பக தருவென்ன
மேதகு பணிகளுக்கு வாரி வழங்கிநிற் போய்
மாண்புறு வாழ்வதனால் மனிதருமே தெய்வமென
வாழலாம் என்பதனை மன்புவி உணரவைப்போய்.

( வாழ்த்துகின்றோம் )

பேரவையினர்

## இன்பம் எங்கே?

ஒருவன் மற்றவர்களுக்கு கொடுத்து அவர்களது துன்பத்தை போக்குவதன் மூலம் பெறுகின்ற இன்பமே சிறந்ததாகும். இல் வாழ்க்கை வாழுகின்ற ஒருவன் பொருளைத்தேடி அதனை மற்றவர்களுக்கும் கொடுத்து அதன் மூலம் மகிழ்ச்சியை பெறுகின்ற சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆச்சிரமத்தில் நடைபெறுகின்ற அன்னதானச் செயற்பாடு கொடுக்கின்ற பழக்கத்தை பலருக்கு ஏற்படுத்துகின்றது. இவ்வாறு கொடுக்கின்ற பழக்கம் ஏற்படுவதால் அவர்களது குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படுவதற்கு இது காரணமாக அமைகின்றது.

மயில்வாகன சுவாமிகளின்
குருபூசைத்தினத்தில்
பண்டிதர் கை. நமசிவாயக்குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# பாண்டவர்கள் துருபத நாடடைதல்

பீமன் பகனை வதஞ்செய்த பின்னர் ஏகச்சக்கர நகரில் பாண்டவர்களின் மதிப்பு அதிகரித்தது. நகர மக்கள் தாமாக முன் வந்து பாண்டவர்கட்கு அன்னமும், தயிரும், பாலும், நெய்யும், பழங்களும் போதியளவு அளித்தனர். இதனாற் பாண்டவர்களும் தாய் குந்தி தேவியும், வசதிகளுடன் மகிழ்வாக அந்நகரில் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு இருக்கும் நாளில் பாண்டவர்கள் தங்கியிருந்த பிராமணரின் இல்லத்திற்கு அதிதியாக ஒரு பிராமணர் வந்து சேர்ந்தார். அவர் பல ஊர்களையும், திருத்தலங்களையும் தரிசித்து, இங்கு வந்திருந்தார். விருந்தினராக வந்திருந்தவர் தான் தரிசித்த தலங்களைப் பற்றியும், வேறு பல விசேடங்கள் பற்றியும் பாண்டவர்கட்குச் சொல்லலானார். அவர் மூலம் பாண்டவர்கள் புண்ணிய தலப்பெருமைகளையும் புண்ணிய தீர்த்தங்களின் மகிமைகளையும் கேட்டறிந்தனர். ஒரு நாள் அவர் பாஞ்சால நாட்டைப் பற்றியும், மன்னன் துருபதனைப் பற்றியும், அவனின் புதல்வனும் புதல்வியும் யாகத்தில் தோன்றியமை பற்றியும் எடுத்துரைத்தார். பின்னர் துருபதனின் புதல்வியாகிய திரௌபதிக்குச் சுயம்வரம் நடக்க இருப்பதையும் எடுத்துரைத்து அவளின் பேரழகினை வர்ணித்தார். முடிவில் தான் தனது சீடர்களுடன் பாஞ்சால நாடு சென்று திரௌபதியின் சுயம்வரத்தைக் காணப்போவதாகக்கூறி, பாண்டவர்களையும் தன்னுடன் வருமாறு அழைத்தார். விருந்தினராக வந்திருந்த பிராமணர் கூறியவற்றைச் செவிமடுத்த பாண்டவர்களும், குந்தி தேவியும் ஆலோசனை செய்து, பாஞ்சால நாட்டுக்குச் செல்வது என முடிவு செய்தனர்.

---

★ உடல் உள்ளவரைக்கும் கடல் கொள்ளாத கவலை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் அவர்கள் ஏகச்சக்கர நகரை விட்டுப் பாஞ்சால நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டனர். அப்போது வியாச முனிவர் அவர்களிடத்து வந்து சேர்ந்தார். பாண்டவர்கள் வியாசரை வணங்கி நின்றனர். வியாசர் அவர்களை நோக்கி '' இளவல்களே, முன்பொரு நாள் தபோவனத்து ரிஷி ஒருவருக்கு ஒரு பெண்மகவு பிறந்திருந்தது. அப்பெண் குழந்தை தக்க வயதை அடைந்தும், பாக்கியக் குறைவினால் அவளுக்குத் திருமணம் நடைபெறவில்லை. இதனால் மனவேதனை கொண்ட அக்கன்னிப் பெண் தக்க கணவன் கிடைக்க வேண்டும் என்று தவம் புரியலானாள். அவள் தவத்திற்கு இரங்கிய முதல்வன் அவள் முன் தோன்றினான். '' கணவன் வேண்டும் '' என்று அவள் ஐந்து முறை இறைவனிடம் கேட்கலானாள். இறைவன் அவளை நோக்கி '' நீ ஐந்து முறை கணவன் கிடைக்க வேண்டும் என்று கேட்டபடியால் உனக்கு மறுபிறவியில் ஐந்து கணவன்மார் கிடைப்பார்கள் '' என்று வரம் கொடுத்து மறைந்தருளினார். அப்பெண் இப்பிறவியில் துருபத மன்னனின் புதல்வியாகப் பிறந்திருக்கிறாள். அவள் உங்கள் ஐவருக்கும் மனைவியாவாள். அவளை மணப்பதன்மூலம் உங்களுக்குச் சகல ஐஸ்வர் யங்களும் கிட்டும் '' என்று கூறலானார்.

வியாசர் விடைபெற்றுச் சென்றதும் அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். வழி நடந்து சென்று இரவு நேரம் கங்கைக் கரையை அடைந்தனர். அப்போது கங்கையில் கந்தர்வன் ஒருவன் ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்தான். ஆற்றைக் கடக்கக் கருதி மனிதர்கள் தான் ஜலக்கிரீடை செய்யும் நேரத்தில் ஆற்றின் அருகே வந்தமையாற் கோபமுற்ற கந்தர்வன் பாண்டவர்களுடன் போர்புரியத் தொடங்கினான். அர்ச்சுனன் அவனுடன் போரிட்டு அவனைத் தோற்கச் செய்த போது, கந்தர்வனின் மனைவி அர்ச்சுனனை அடிபணிந்து வேண்டியதன் பேரில் அர்ச்சுனன் கந்தர்வனை விடுவித்தான். இதனால் மகிழ்வுற்ற கந்தர்வன் அர்ச்சுனனுக்குக் கந்தர்வர்களின் '' சாக்சுசி '' என்ற வித்தையையும் கற்றுத்தந்து, மனோவேகத்திற் செல்லக்கூடிய நூறு குதிரைகளையும் அளித்தான். அர்ச்சுனன் வித்தையைக் கற்றறிந்து கொண்டு, குதிரை களைத் தான் தேவைப்படும் நேரத்திற் பெற்றுக்கொள்வதாகச் சொல்லி அவனிடமே கொடுத்து விட்டான். பின்னர் அர்ச்சுனன், கந்தர்வனை நோக்கி '' எதனால் மனிதர்கள் கந்தர்வர்களுக்குப் பயப்பட வேண்டி இருக்கிறது '' என வினவினான். அப்போது கந்தர்வன் '' அர்ச்சுனா, பிராமண உதவியின்றி நீங்கள் இருக்கிறீர்கள் அதனால்த்தான் நான் உங்களை எதிர்க்க வேண்டி இருந்தது. அந்தணரின் ஆசீர்வாதம் இருக்கும் ஒருவன் கந்தர்வர்கள், இயக்கர், அரக்கர் போன்றோருக்குப் பயப்பட

★ ஆபத்திலே சிநேகிதனை அறி. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதில்லை. எனவே வேதம் வல்ல அந்தணர் ஒருவரை உங்கள் புரோகிதராக நியமித்துக் கொள்ளுங்கள். புரோகிதராக இருக்கும் அந்தணர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்று கூறுகிறேன் கேட்பீராக. அந்தணர்கள் வேதங்களை நன்கு கற்றவராகவும், உயர்ந்த ஒழுக்க நெறியுள்ளவராகவும், புனிதமானவராகவும், தர்ம சிந்தனையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு உயர்ந்த பண்புகள் உள்ள அந்தணர் ஒருவரை நீங்கள் புரோகிதராக வைத்துக்கொள்ளுங்கள். இத்தகைய சிறந்த பண்புகள் உள்ளவராக "தேவல" முனிவரின் சகோதரரான "தௌமியர்," உத்கோசம் என்னும் புண்ணிய தீர்த்தத்தில் தவம் செய்து கொண்டிருக்கிறார். அவரை நீங்கள் அணுகி, அவரின் உதவியைக் கேளுங்கள்" என்று சொல்லிய கந்தர்வனிடம் விடை பெற்றுப் பாண்டவர்கள் தௌமிய முனிவர் இருக்கும் ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றனர்.

தௌமிய முனிவரை அடைந்து அவரை அணுகித் தமது உளக் கருத்தை வெளியிட்டனர். தௌமியரும் அவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்து அவர்களுடன் புறப்படச் சித்தமானார். பாண்டவர்கள் தௌமியருடன் சென்று பலநாடுகளையும் கடந்து துருபதமன்னனின் பாஞ்சால நாட்டை அடைந்தனர். அந்தணக் கோலத்துடனே பாண்டவர்கள், ஒரு குயவனின் வீட்டில் தங்கி இருந்து வந்தனர்.

பாஞ்சால நாட்டு மன்னனாகிய துருபதன், முன்பு துரோணாச்சாரியாருடன் ஏற்பட்ட பகைமையினால் மனத்திற் பயம் கொண்டவனாகவே வாழ்ந்து வந்தான். தனது புதல்வியாகிய திரௌபதியை அர்ச்சுனனுக்கு மணம் செய்து கொடுப்பதன் மூலம் இப்பகைமையை ஒழித்து விடலாம் என்று நம்பியிருந்தான். பாஞ்சாலி மணப்பருவம் அடைந்ததும் அர்ச்சுனனுக்கு விவாகம் செய்து வைக்கக் காத்திருந்தான். இவ் வேளையிற் பாண்டவர்கள், அரக்கு மாளிகையில் வஞ்சனையால் எரியூட்டப்பட்டு மாண்டனர் என்று செய்தியை அறிந்தான் துருபதமன்னன். இதனால் மிக்க கவலை கொண்ட துருபதன், தன்மந்திரி பிரதானிகளுடன் கலந்து யோசிக்கலானான். மக்களிற் சிலர் பாண்டவர்கள் இறந்திருக்கமாட்டார்கள் என்று நம்பி இருந்தனர். சிலர் துரியோதனனின் சூழ்ச்சியைக் கடிந்து கவலைப்பட்டனர். இவ்வாறான நிலையில் யாது செய்யலாமெனப் பலரும் பல அபிப்பிராயங்களை மன்னனுக்கு எடுத்துரைத்தனர்.

அரசவைப் புரோகிதர் மன்னனை நோக்கி "வேந்தா! பாண்டவர்கள் இறந்திருப்பார்கள் என்பது சந்தேகமானது. அவர்கள் உயிருடன் இருந்தால் அவர்களை வருவிக்க ஒரேயொரு வழிதான் உண்டு.

வீண் பெருமை எவனையும் வீழ்த்தி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது புதல்விக்குச் சுயம்வரம் என்று அறிவிப்பாயாக. அதனை அறிந்தாற் பாண்டவர்கள் கட்டாயம் இவ்விடம் வந்து சேர்வர்'' என்று உரைத்தார். புரோகிதர் கூறியவற்றால் மகிழ்வடைந்த துருபதன் ''இன்னும் எழுபத்தைந்து தினங்களின் பின்னர் வரும் மங்கலமான நன்னாளில் திரௌபதிக்கு சுயம்வரம் நடைபெறும்'' என்று அறிவிக்கச் செய்தான்.

இற்றைத் தொடரிலே கந்தர்வன் வாயிலாக அந்தணர் தம் தன்மைகள், தகமைகள் எவ்வாறிருத்தல் வேண்டுமெனப் பாரதம் பகருவதை அறியக்கூடியதாகவுள்ளது. அத்துடன் எம் வாழ்விற்கு நல்ல வழிகாட்டி ஒருவர் வேண்டும் என்பதும் அறியக்கூடியதாகவுள்ளது. வழிகாட்டி அதாவது நல்லாசான் ஒருவரின் வழிகாட்டல் எம்மை மேன்மையடைய வைக்கும் என்பதும் புலனாகிறது.

இற்றைநாளில் ஆசான் ஒருவரைத் தேடுதல் என்பதே அரிதாகி விட்டது. குருவைத்தேடி அவரைப்பணிந்து, அவர் ஆற்றுப்படுத்தலில் எம் வாழ்க்கைப் பாதையை அமைத்தல் என்பது கேலிக்குரிய ஒரு விடயமாகக் கணிக்கப்படுகிறது. நல்ல குருதேவரை அடைதல் என்பது எமது லௌகீக வாழ்வை மேன்மையடையச் செய்வதுடன் ஆன்மீக வாழ்வுக்கும் தேவைப்படுகிறது. ''ஆன்மீகம்'' ''ஆன்மீக வாழ்வு'' என்பதெல்லாம் வேண்டப்படாதவை என்று ஒருபுறம் பகவார் உளர். நவநாகரீக மோகம் மக்கள் வாழ்க்கை முறையை வெறும் சுகபோக வாழ்வாக மாற்றுகிறதே அன்றி, உண்மையான, யதார்த்தமான எளிமையான வாழ்வை மக்களுக்கு போதிக்கத் தவறுகிறது. இதனால் அன்றோ உலகு இன்று இன்னல்படுகிறது. எனவே நாம் இன்றைய இளம் தலை முறைக்கு எடுத்துரைக்கும் வழியாதெனில், நல்ல குருநாதன் ஒருவரை எம்வாழ்வின் வழிகாட்டியாகத் தேடிக்கொள்ளுங்கள் என்பதேயாகும். ஞானியரும் நற்குருவும், தம்மை வெளிச்சம் போட்டுக்காட்டி வாழ்வதில்லை இலை மறைகாயாக, குடத்தினுள் ஒளிரும் விளக்குப் போன்று வாழும் குருவைத் தேடுதலே தலையாய கடனாகும்.

குருவாகக் கொள்பவர் எப்படி இருக்க வேண்டியவர் என்பதை தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்கிறது. வள்ளுவப் பெருந்தகை வழுத்தியமை போல்.

---

★ அறிவும் அறியாமையும் சேர்ந்ததே மனம். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்."

உயிர்களிடத்து, அன்பும், கருணையும், தயையும் மிகுந்தவராய் இருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. வேதாகமங்களில் சிறந்த பாண்டித்தியம் மிக்கவராய் மட்டும் அந்தணர் இருத்தல் போதாது. உயர்ந்த ஒழுக்கநெறி நிற்பவராயும், கருணை உடைய நெஞ்சினராயும் பக்தி என்னும் பண்புடையவராயும், அந்தணர் இருத்தல் அவசியம். இவ்வாறு பாரதம் பகரும் பண்புகளை நாம் வாழ்வில் கைக்கொண்டொழுகி மேன்மையடைவோமாக.

[ தொடரும் ......

சிவத்திரு வ. குமாரசாமிஐயர்

---

## தமிழில் அச்சான முதல் நூல் திருக்குறள்

அக்காலத்தில் அச்சு இயந்திரம் வந்தவுடன் சென்னை அரசாங்க தலைவராக இருந்த ஆங்கிலேயர், "எந்த நூலை முதலில் அச்சிடலாம்?" என்று வினவினார்.

அதற்கு அருகில் இருந்தவர்கள், "தஞ்சை மன்னனின் அரசவைப் புலவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரைக் கேட்டால் நல்ல நூலை தெரிந்து சொல்லுவார்" என்றார்கள்.

ஆங்கிலேயர் தேசிகரை வரவழைத்து வினவியபோது, "திருக்குறளை வெளியிடலாம்" என்று புலவர் கூறினார்.

ஆங்கிலேயர், "அந்த நூலில் என்ன இருக்கிறது?" என்று கேட்டார். அத்திருப் புலவர் "அதில் என்ன இல்லை?" என்று பதிலளித்தார்.

"அப்படியானால் இந்தக் கல்லைப் பற்றி இருக்கிறதா?" என்று நிலத்தில் கிடந்த ஒரு கல்லைக் காட்டி ஆங்கிலேயர் கேட்டார்.

"இருக்கிறது ஒரு முறைக்கு இரண்டு முறை கல்லைப் பற்றிக் கூறியிருக்கிறது.

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழியடைக்கும் கல்"

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்"

என்ற குறட்பாக்களைப் புலவர் சொன்னார். அதனைக் கேட்டதும், திருக்குறளின் சிறப்பையும் அதைச் சிறப்புற உணர்ந்து உரைத்த சிவக்கொழுந்து தேசிகரையும் பாராட்டிய துரைமகனார் திருக்குறளை முதலில் அச்சேற்றினார்.

---

★ நம்பிக்கை உடையவர்களாக இருங்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை வழிபாட்டுக்குரிய மார்கழி மாதம்

மார்கழி மாதம் இறைவனை வழிபடுவதற்குரிய உகந்த சிறப்பான மாதமாகும். இறை பக்தியில் எம்மை ஈடுபடுத்தும் இயற்கைத் தன்மை இம் மாதத்துக்கு உண்டு. லௌகீக நிகழ்ச்சிகளை நீக்கித் தனியாக இறை வழிபாட்டுக்குரிய மாதமாக மார்கழி மாதம் திகழ்கிறது.

சிவனுக்குரிய திருவாதிரைத் திருநாளும் இம் மார்கழியிலேயே அனுஷ்டிக்கப்படுகிறது. திருஞானசம்பந்தர் பூம்பாவையை எழுப்புகின்றபோது ஆதிரை நாட் பெருமையைத் திருப்பதிகத்தில் அமைத்துப் பாடியுள்ளார். பகவத் கீதையில் ''மாதங்களில் நான் மார்கழியாகவுள்ளேன்'' எனக் கிருஷ்ண பரமாத்மா கூறியுள்ளார்.

சிவ விரதமான திருவெம்பாவையும், விஷ்ணு விரதமான ஏகாதசியும் சேர்த்து இந்துக்களின் சிறந்த வழிபாட்டு மாதமாக மார்கழிமாதம் அமைகின்றது. பூமியில் ஒரு வருடகாலம் தேவர்களுக்கு ஒரு நாளாக அமைகிறது. தேவர்களுக்குத் தை மாதம் முதல் ஆனி வரையுள்ள உத்தராயணகாலம் பகற் பொழுதாகவும், ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையுள்ள தட்க்ஷணாயனகாலம் இரவுப் பொழுதாகவும் அமைகின்றது. தேவர்களுக்கு மார்கழி மாதம் வைகறைக் காலமாகையால் திருவாதிரையில் ஏகாதசியில் மகாவிஷ்ணுவையும் அதிகாலையில் வழிபாடு செய்து இன்புறுவர்.

''வைகறையில் துயிலெழு'' என்பது தமிழ் மூதாட்டியின் வாக்கு. மானுடரையும் தேவர்களையும் இறைவனையும் துயிலெழுப்பும் வகையில் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைப் பாடியுள்ளார் மாணிக்கவாசகர். இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது. ஆதியும் அந்தமும் இல்லாத, உறக்கமும் விழிப்பும் இல்லாத ஆண்டவனைத் துயிலெழுப்புவது போல் எங்களை நாங்களே உணர்ந்து இருளில் மூழ்கடித்துள்ள மும்மலங்களை நீக்கி ஞான ஒளிபெற்று விழிப்படைய வேண்டுமென்பதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

---

★ எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தடுமாறாதே. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி மாத ஞாயிற்றுக்கிழமை விரதம் மிகப் பலனளிக்கும். இம் மாதம் தனுராசியில் சூரியன் இருக்க நேர்கோட்டில் சந்திரன் திருவாதிரை நட்சத்திரத்தில் மீனராசியில் இருக்கும் காலம். இறைவன் இந் நாள்களிலே திருநடனம் புரிந்து பேரின்பத்தை நமக்குத் தரும் காலமென் பார்கள்.

இம்மாதத்தில் நாம் எமது வீட்டையும் சூழலையும் சுத்தம் செய்து முற்றத்தினை மெழுகிக் கோலமிட்டு, சாணியில் அல்லது மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து, பூவினால் அலங்கரித்து தீபம் வைத்து வழிபட்டால் தேவர்கள் மனமகிழ்ந்து எம்மையும் எமது வீட்டையும் நாட்டையும் காத்து அருள்புரிவார்கள் என்பது நீண்டகால நம்பிக்கை. ஆகவே எமது இன்னல்களாகிய இருள் அகற்றி, துயிலுணர்த்தி, ஞானநீராடி, அருள் பெற்று, நன்னெறி காட்டும் திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவைப் பாடல்களை ஓதி உணர்ந்து உய்தியடைவோமாக. எமக்கு மன அமைதியையும், பாதுகாப்பையும் சுபீட்சத்தையும் தரவல்லது தெய்வ வழிபாடேயாகும்.

சமூகஜோதி
கா. கணேசதாசன் J. P.
(ஓய்வு பெற்ற அதிபர்)

### எண்ணங்கள்

இப்போது நாம் என்னவாக இருக்கிறோமோ அது, நாம் நம் மனத்தில் என்றோ எண்ணிய எண்ணங்களின் விளைவே ஆகும். எண்ணங்களே அடிப்படை.

ஒரு தீய எண்ணத்துடன் ஒருவன் பேசினாலோ அல்லது செயற்பட்டாலோ, ஒரு வண்டியை இழுத்துச் செல்லும் எருதின் காலடிச் சுவட்டைப்போல, அந்தத் தீமை அவனைப் பின் தொடரும்.

அது போலவே தூய எண்ணத்துடன் பேசினாலோ செயற்பட்டாலோ அந்தத் தூய்மை, நிழலைப்போல் அவனை விட்டு நீங்காது

அரச பதவி கிடைப்பதானாலும் மனச்சாட்சியை விற்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசர் கூறும் ஐந்து உண்மைகள்

[தொடர்ச்சி...

காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம் — மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயரம் எல்லாம் விடும்.

இப்பாடலுக்கு விளக்கம் எழுதிய பட்டுச்சாமி ஓதுவார் என்ற பெரியார் ''சிவதரிசனம் காலையிற் செய்தால் இரவிலே செய்த பாவம் நீங்கும். நடுப்பகலிற் செய்தால் பிறந்தநாள் தொடங்கிச் செய்த பாவம் நீங்கும் மாலையிற் செய்தால் ஏழுபிறப்பில் செய்த பாவம் நீங்கும்,, என குறிப்பிட்டுள்ளார். இத்தகைய சிறப்புடைய சிவதரிசனம் ஆலயத்தை வலம் வருதல் என்பன தினமும் பலமுறை மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்க ஒருமுறை தானும் மேற்கொள்ளா திருத்தல் பெரும் தவறு என்று காட்டுகின்றார்.

உண்பதன்முன் மலர் பறித்திட்டு உண்ணல் வேண்டும் என்பது நான்காவது விடயமாகும். மலர் பறித்திடுதல் என்பதைச் சிலர் ஆலயத் தேவைக்கு மலர் கொய்து கொடுத்தல் என்று கருதுகின்றனர். அப்படியன்று மலர் கொய்து சிவபெருமான் திருவடியிற் பூசித்தல் என்பதே இப்பகுதியின் பொருள் என்பதைப் பெரியபுராணத்திற்கு விரிவுரை வகுத்த சைவப் பெரியார் சிவக்கவிமணி சீ. கே. சுப்பிரமணிய முதலியார் எழுதியுள்ளார், சேக்கிழார் மரபினரான இவர் கருத்து ஏற்கப்படவேண்டியதே. சைவசமயி ஒவ்வொருவரும் தன் தகுதிக்கும் வசதிக்கும் ஏற்பச் சிவபெருமானை மலர் கொண்டு வழிபடவேண்டிய கடமையும் உரிமையும் உடையவர். வேத மந்திரங்களை உச்சரிக்கும் அறிவு ஒழுக்கம் உரிமை என்பன இல்லாதவரும் தமக்கு இயன்ற ஆசாரத்துடன் கோவில் தூபியையோ கோபுரத்தையோ பார்த்து மலர்தூவி வழிபடல் வேண்டும் என்னும் கருத்தை ஆறுமுகநாவலர் பெருமான் ஓரிடத்திற் குறிப்பிட்டுள்ளார்.

மலர்தூவி வழிபடும் செயலை உண்பதன்முன் செய்தல் வேண்டும். உணவு வயிற்றில் இருக்கும்போது மனம் அமைதியாயும் தூய்மையாயும் இருத்தல் இயலாது. மனமும் உடலும் சேர்ந்து செய்யும் செயலை உண்

★ என்றும் மறவாத நட்பே மெய்யான நட்பு. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதன்முன் செய்ய வேண்டும். இதை நம்முன்னோர் மிக அக்கறையுடன் கடைப்பிடித்திருக்கின்றார்கள். பகல் திருவிழா மாலை 4—5 மணிக்கு நிறைவுறும் என்றால் அதன் பின்னரே பகலுணவை உண்ணும் நியதியை ஆலய குருமார் – அர்ச்சகர் – ஆலயத்தில் தொண்டு செய்வோர் – உபய காரர் – திருவிழா விரதகாரர் என்று பலதரத்தினரும் பின்பற்றியிருக் கிறார்கள். இவர்களுள் அர்ச்சகர் – குருமார் மிகக்கடும் நியமங்களைக் கைக்கொண்டிருக்கிறார்கள். இக்காலத்திற் கூடப் பல இடங்களில் குருமார் அர்ச்சகர் இவ்வுணவுக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதும் அப்படியான வர்கள் விடயத்திலும் அப்படியான ஆலயங்களிலும் திருவருள் விளக்கம் சிறப்பாயிருப்பதும் காணக்கூடியதாயுள்ளது.

உண்பதன்முன் மலர் பறித்து இட்டு உண்ணல் என்ற தொடரில் நாவுக்கரசர் இரு இடங்களில் உண்ணல் என்ற சொல்லைப் பயன்படுத்தி யிருப்பது அவதானிக்க வேண்டிய விடயமாகும்.

மலர் பறித்து பெருமானை அருச்சிக்கும் ஒவ்வொருவரும் அருச் சிக்கு முன் உண்ணலாகாது என்பதை முதலாவது உண்ணல் மூலம் குறிப் பிட்டுள்ளார் எனில் மலர் பறித்திட்டபின் உண்ணவேண்டும் என்பதை யும் குறிப்பிடுவதுபோல் இரண்டாவது உண்ணல் என்ற சொல் உள்ளது. இதில் உள்ள சிறப்பு என்னவென்றால்;

சிதம்பரத்தில் நடராச தரிசனம் கிடைக்குமென்றால் மனிதப் பிற வியும் வேண்டுவதே என்றமை போலச் சிவனை மலர் கொண்டு வணங் கியவர்க்கே உணவை உண்ணும் உரிமை உண்டு என்ற கருத்துப் புலப் படுகின்றது. உடம்பாலும் மனத்தாலும் சிவவழிபாடு செய்த சைவ சமயிக்கே உடம்பைப் பேணும் அவசியம் உண்டு. உடம்பாற் பெறத் தக்க பயனைத் தொடர்ந்து பெற உடம்பைப் பாதுகாக்க உண்ணல் அவசியம் என்பதை வற்புறுத்துவார் போல் இரண்டாம் முறையும் உண்ணல் என்ற சொல் அமைந்திருக்கின்றது.

'' அருநோய்கள் கெடவெண்ணீறு அணிதல் ''

என்பது ஐந்தாம் உண்மை யாகும். நோய் நீக்குதற்குத் திருவெண்ணீறு உதவும் என்பது திருஞான சம்பந்தர் பாண்டியனின் வெப்புநோயை அதாவது வேறு உபாயங்களால் தீராத கொடிய வெப்புநோயைத் தீர்த்ததிலிருந்து தெளியலாம்.

வெண்ணீறு அணிதல் என்பதில் அணியும் நீறு வெண்மை உடைய தாயிருத்தல் வேண்டும் என்பதையும் அணியும் போது பிரகாசமாய் — அழகாய் தெரியத்தக்கதாய் அணிய வேண்டும் என்பதையும் குறிப்பிடப்

★ மிகுந்த ஆவலுடன் எதையும் எதிர்பார்க்காதே. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. திருமூலரும் ஓரிடத்தில் கவசத் திருநீற்றை மங்காமல் பூசி மகிழ வேண்டும் என்று குறித்துள்ளார்.

காலை மாலையிலும் ஆலயதரிசனத்தின் போதும் வழமையாக அணிவதுடன் நோய் நீக்கத்திற்கென நோயால் வருந்தும் போதெல்லாம் அணிதல் வேண்டும் என்ற கருத்தை அருநோய்கள் கெடவெண்ணீறணிதல் என்ற பகுதி வலியுறுத்துவதாகக் கொள்ள வேண்டும்.

இக்கருத்துக்கள் மட்டுமன்றி அருநோய்கள் என்பதற்கு பிறவி நோய் — அறியாமை நோய் — காமவெகுளி மயக்கங்களாகிய நோய்கள் கெடவும் வெண்ணீறணியலாம் என்ற கருத்தும் கொள்ளலாம்.

இவ்வாறு அரிய ஐந்து உண்மைகளை எடுத்துக் கூறிய திருநாவுக்கரசர் இவ்வுண்மைகளை தினமும் கடைப்பிடித்து வாழாவிட்டால் உண்டாகத் தக்க நட்டத்தையும் அழகாகப் பாடியுள்ளார்.

'' அளியற்றார் பிறந்தவாறு ஏதோ என்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும்
செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி
இறக்கின்றாரே '' என்ற இப் பகுதியிலும்

பிறத்தல் என்ற சொல்லும் இறத்தல் என்ற சொல்லும் இருமுறை வருதல் காண்க. அத்துடன் பெயர்த்தும் செத்தும் என்ற தொடர் இவ்வுலகில் வாழும்போதே பலதடவை இறப்பை அடைகின்றார்கள் என்ற கருத்தையும் வெளிப்படுத்துகின்றது.

சந்தைக்குப் போய் நினைத்த பொருளை வாங்காதவனும் வைத்தியசாலைக்குப் போய் நோயை மாற்றாதவனும் பாடசாலைக்குப் போய் கல்வியில் தேர்ச்சியடைந்தவனும் தம் முயற்சியில் தோல்வியைத் தழுவுவதுபோல் மனிதனால் அதுவும் சைவசமயியாய் பிறந்தும் மேற்கூறிய ஐந்து உண்மைகளையும் கடைப்பிடிக்காதவர் தம்பிறவியினால் அடையத்தக்க பயனை அடையாது தோல்வியை தழுவுபவராவர் என்பது காண்க.

இத் தொடரில் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே என்ற பகுதியால் எல்லாவாய்ப்புக்களும் உடைய இப்பிறவியை பயன்படுத்தாது வீணாக்குபவர் இனி பிறவிகளை அடைந்தாலும் கூட அவற்றால் அடைய வேண்டிய பயன்களை அடைவது சந்தேகமே என்பார் போன்று கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளார். அப்படியே இவர்களும் மனிதப்பிறவிகளும் கூட இப்பிறப்பில் மேற்கொள்ள வேண்டிய சரிய — இனிய கடமைகளை மேற்கொள்ளாது விட்ட பாவப்பயனால் நோய்மலிந்த பிறவியாகக் கூடும் என்பார் போன்று பெருநோய்கள் பீடி நலியப் பெயர்த்தும் செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே என்றார்.

வைதிக சைவநன்னெறியும் அருநெறிய தமிழ் மொழியும் வழங்கும் தேசத்தில் பிறந்த நாமெல்லாம் இவ்வுண்மைகளைத் தெளிவுறக் கடைப்பிடிக்க விரும்புவோமாக — முயல்வோமாக — பயனடைவோமாக.

தி. பொன்னம்பலவாணர்

---

## நல்ல நோக்கம் வேண்டும்

ராவணன், கும்பகர்ணன், இரணியன் முதலானோர் கடுந்தவம் செய்தனர். பகவான் வந்து என்ன வரம் வேண்டும் என்று கேட்டபோது இவர்கள் உலகெலாம் ஆள வேண்டும். எல்லோரையும் அடக்க வேண்டும். இன்னின்ன விதமாக மரணம் ஏற்படக் கூடாது என்றெல்லாம் வரம் கேட்டுப் பெற்றார்கள். இதில் உலக நலன் எதுவுமில்லை. இவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் அழிந்தனர்.

ஒரு எறும்பிற்கு மனிதனைக் கண்டால் பிடிக்கவில்லை. தான் கடித்தவுடன் மனிதன் சாகவேண்டும் என எண்ணிய எறும்பு பகவானை நோக்கி கடும் தவம் செய்தது. பகவானும் வந்தார். என்ன வரம் வேண்டும் என்றார். எறும்பு அவசரத்தில் ''நான் கடித்ததும் சாக வேண்டும்'' என்றது. பகவான் அப்படியே ஆகட்டும் என்றார்.

அது முதல் எறும்பு மனிதனைக் கடித்தவுடன், அவன் தன் கையினால் எறும்பு கடித்த இடத்தையும், எறும்பையும் சேர்த்து ஒரு தேய்ப்பு தேய்க்கிறான். எறும்பு இருந்த இடம் தெரியாமல் போகிறது.

இப்படி பிறரை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் என்ன தான் பகவானிடம் வரம் கேட்டாலும், இந்த நோக்கம் நிறைவேறாத படிதான் வரம் தருவார். அதனால் நோக்கம் நல்லதாக இருக்க வேண்டும்.

---

★ மனதை மெல்ல மெல்ல அடக்க வேண்டும். ★

# உயர்திரு செல்லப்பா சுவாமியார்

[ ஆவணி மாத தொடர்ச்சி......... ]

இந் நிலையிற் சிவனடியார்கள் எவ்வளவோ தம்மைப் பூரணப் படுத்தியல்லவோ சதா சிவத்தியானமுடையவராய் மற்றவர்களையும் அவ்வாறு ஆற்றுப்படுத்துகிறார்கள் என்பதைச் சிந்தித்து உணரவேண்டும். அல்லாமல் இயற்கையின் அற்புதமே இவையென்று சும்மா சொல்லிவிட முடியுமா? சிவசிந்தனையில் ஈடுபட்டு வாழ்பவருக்கன்றோ அதன் அருமையும் பெருமையும் விளங்கும். ஆபத்துக் காலத்தில் முன்பின்னறியாதவரொருவர் துணை செய்வதையும், வீழ்ந்த பொழுது ஓடி வந்து ஒருவர் தூக்கி விடுவதையும், பசித்த நேரம் ஒருவர் இனிய உணவுகளைத் தந்து உதவுவதையும், பாதை தெரியாமற் சங்கடப்படும் போது திடீரென ஒருவர் வந்து பாதை காட்டுவதையும், பயணத்திற் பணத்தைத் தவற விட்டிருக்கும் இன்னொருவர் வந்து பணம் கொடுப்பதையும் திருவருட் சத்தியன்றி வேறென்னவென்று நினைக்கிறீர்கள்.! சமயகுரவர்கள் செய்த பல அற்புதங்கள் இதற்குச் சான்றாயமையுமன்றோ.

யோகர்சுவாமிகள் கதிர்காமஞ் சென்றதை அறியாத அவரது உறவினர்கள், செல்லப்பாச் சுவாமிகளிடம் வந்து விசாரித்த போது அவர் அவன் ''செத்துப் போனான்'' என்று திருவாய்மலர்ந்தாராம். சின்னாள் சென்றபின் யோகர்சுவாமிகள் மீண்டு வந்ததைக் கண்ட சுற்றத்தார் சந்தோஷப்பட்டனர். அதன் பின் அச்சுற்றத்தினர் செல்லப்பாச்சுவாமிகளிடஞ் சென்று ''என்னையா யோகர் வந்துவிட்டார். ஆனால் நீங்கள் அவர் செத்துப்போனார்'' என்று சொன்னது சரியோ, எனவினாவினர். அவர்கள் வார்த்தையைக் கேட்ட செல்லப்பர்:- நான் பொய் சொல்லவில்லை, அவன் செத்தேபோனான் என மீண்டுஞ் சொன்னாராம். வந்தவர்களிற் சிலர் சுவாமியார் சொன்னதை ஆழமாகச் சிந்தித்து அவர் கூறியதை ஒப்புக் கொண்டார்களாம்.

செல்லப்பாச்சுவாமிகள் சிவசிந்தனையில் முருகமூர்த்தியின் பாதாரவிந்தத்தை நினைந்து தாம் அகமுகமாகக் கண்ட காட்சிகளையிட்டுப் பறைவதும் திரிவதும் உலைவதும் போலுலையாமல் அலைவதும் போலலையாமல் திரிந்தாரென்பர். சாதாரண நேரங்களில் கைப்பணி செய்வதிலும் கிடுகுபின்னுவதிலும் ஈடுபட்டவரென்பர். ஒருநாள் சேர். பொன் இராமநாதனவர்கள் இணுவில் மருதனார்மடத்தில் மகளிருக்கான ஒரு பெரிய கல்லூரிக்கு அடிக்கல் நாட்டிய நாளில் அவ்விடஞ் சென்ற சுவாமிகள் தான் கட்டிய ஒரு விசிறியை இராமநாதன் கையிற் கொடுத்து ''ஒரு பொல்லாப்புமில்லை'' ''எப்பவோ முடிந்தகாரியம்''

---

★ நற்குணங்களையே நான் ஞானம் என்று சொல்வேன். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முழுதும் உண்மை" "நாமறியோம்" என்ற நான்கு மகா வாக்கியங் களைக் கூறிச் சென்றாராம். (இந் நிகழ்ச்சி, இராமநாதன் கல்லூரி வெள்ளிவிழா மலரில் திரு. சோமசுந்தர உபாத்தியாயர் எழுதியதாகத் திரு. சு. அம்பிகைபாகர் தமது கட்டுரையிற் கூறியுள்ளார்.)

## சுவாமிகளின் சமாதி

செல்லப்பாச் சுவாமிகள் ஊர்சுற்றினாலும் நல்லூர்க் கோவிலைச் சுற்றி வந்தாலும் நல்லூரிலுள்ள தமது கொட்டிலிலேயே தங்கிவிடுவாராம். சுவாமிகள் நோயுற்றிருந்த போது, யோகர்சுவாமிகள் பார்க்கச் சென்றிருந்தாராம். அப்போது அவரைக் கண்ட செல்லப்பாச்சுவாமிகள் "என்ன பார்க்கப் போகிறாய் வெளியில் நின்று உன்னைச் சிந்தித் துப்பார்" என்றாராம். பின் அவரிடத்துக்கு யோகசுவாமிகள் போகவில்லையாம்.

செல்லப்பாச் சுவாமிகளை அப்போது பார்க்கவென்றொரு அன்பர் சென்று போதும் வந்தவரை வெளியேபோய் வா என்றாராம். அப்படியே அவ்வன்பர் சிறிது நேரம் வெளியே சென்ற போது 'டோம்' என ஒரு சத்தம் சுவாமிகளின் படுக்கைப் பக்கமாகக் கேட்டதாம். அன்பர் திரும்பிச் சென்று பார்த்தபோது, சுவாமிகளின் உயிர் பிரிந்திருந்தது. உடல் நீட்டியபடியும் காணப்பட்டதாம்.

சுவாமிகளின் முன் கூறிவைத்த உத்தரவுப்படி அவரின் உடல் தகனஞ் செய்யப்பெற்றதாம். ஈமக்கடன், நீர்க்கடனை அவரின் மருமகன் வைத்திய வித்துவான் திரு. சபாரத்தினம் அவர்கள் செய்து முடித் தாராம்.

சுவாமிகள் சமாதியடைந்த தினமாகிய பங்குனிமாத அச்சுவினி நட்சத்திரத்தன்று, நல்லூரில் தேர் முட்டியடிக்கு அண்மையில் சுவாமிகள் வாழ்ந்த கொட்டிலில் விசேட அபிஷேக ஆராதனைகளும் சடையம்மா மடத்தில் மாகேஸ்வர பூசையும் வருடா வருடம் நடப்பதைக் காணலாம். (யோகர்சுவாமிகள் நூற்றாண்டு மலரைத் தழுவிச் சில எழுதப் பெற்றவை.)

புலவர் வை. க. சிற்றம்பலம்

இந்த உடல் எனக்கு ஒரு விளக்கு. என் உயிரே இந்த ஒளிக்கான திரி, என் இரத்தமே எண்ணெய், இவை கொண்டு இறைவனைக் காண்பதற்காகவே நான் வாழ்கிறேன்.


எண்ணங்களை அடக்கும் போது விழிப்புணர்வு தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் திருவாய்மலர்ந்து அருளியவை

## பெண் ஆசைப் பிணிப்பு



முற்காலத்தில், ஜயபுரியில் இருக்கும் கோவிந்த ஜீயின் கோவில் அர்ச்சகர்கள் கல்யாணம் பண்ணிக் கொள்வதில்லை. ஆகவே அவர்கள் ஆத்ம சக்தியால் வெகு பலம் படைத்தவர்களாக இருந்தனர். ஒரு சமயம் அவ்வூர் அரசன் அவர்களைத் தன்னிடம் வரும்படி சொல்லி அனுப்பினான். அவர்கள் போகாமல் 'அரசனைத்தான் எங்களிடம் வரச்சொல்லுங்கள்' என்று பதில் அனுப்பினர். அப்பால், அவர்கள் கல்யாணம் பண்ணிக்கொண்டனர். அதன்பின் அர்ச்சகர்களை அரண்மனைக்கு வரவழைக்க வேண்டிய அவசியம் அரசனுக்கு இல்லாது போயிற்று ஏனெனில் அவர்கள் தாமாகவே அரசனிடம் வந்து, "மகாராஜ்! நாங்கள் ஆசீர்வாதம் செய்ய வந்திருக்கிறோம் சுவாமிக்குச் சார்த்திய புஷ்பங்களைக் கொணர்ந்திருக்கிறோம் அங்கீகரிக்க வேண்டும்" என்று சொல்ல ஆரம்பித்தனர். அவர்களுக்கு அப்படிப்பட்ட அவசியம் நேர்ந்துவிட்டது. பாவம்! அவர்கள் வேறு என்னதான் செய்வார்கள்? ஒரு நாளைக்கு வீடுகட்ட வேண்டியிருந்தது. இன்னொருநாள் குழந்தைக்கு அன்னப்பிராசனம் செய்ய வேண்டியிருந்தது; வேறொரு நாள் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ண வேண்டியிருந்தது. இப்படியாக அவர்களுக்கு இடைவிடாத பணமுட்டுப்பாடு உண்டாயிற்று. இதனால் இராசசபைக்குப் போக வேண்டிய அவசியம் நேர்ந்தது.

பிறர்க்கு அடிமையாக வேலை செய்வதன் பயனை நீங்களே நன்கு உணர்வீர்கள். ஆங்கிலமும் மேனாட்டுப் பயிற்சியும் பெற்ற வாலிபர்களில் அநேகர் பிறர்க்கு அடிமை வேலை செய்து தங்கள் எஜமானர்கள் கொடுக்கும் வேதனைத்தை வாய்பேசாது பெற்று அனுபவிக்கின்றார்கள். ஏன் இவ்வளவு அவமதிப்புக்கெல்லாம் அவர்கள் உட்பட்டிருக்கின்றார்கள் என்பது தெரியுமா? இவைகளுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பது பொதுப்படப் பெண் ஆசையே ஆகும்.

---

★ ஆகும் காலம் ஆகும், போகும் காலம் போகும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஏழைப்பிராமணன் வேலை கிடைக்காமல் மிகுந்த கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் அடிக்கடி ஒரு கச்சேரி மனேஜரிடம் சென்று வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டான். "இன்றைக்கு இல்லை நாளைக்கு வா" "பின்பொரு சமயம் வா" என்று பதில்கள்தான் அவனுக்குக் கிடைத்தன. இப்படி நெடுநாள் சென்றது. ஒருநாள் அவன் தன்னுடைய கஷ்டங்களைத் தன் நண்பனொருவனிடம் சொன்னான். அந்த நண்பன் 'என்ன அசட்டுத்தனமான காரியம் செய்துவிட்டாய்? அவனிடம் அடிக்கடி சென்று உன் கால் தேய்ந்துபோகும்படி செய்து கொண்டாயேன்? ரோஜாமணியிடம்போ, அவளை நயந்து கேள் உனக்கு நாளைக் காலையிலேயே வேலைகிடைக்கும் பார்' என்றான். ஏழைப்பிராமணனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று 'வாஸ்தவந்தானா? இப்போதே அவளிடம் செல்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு அவளிடம் போனான். அந்த ரோஜாமணி முன் கூறிய கச்சேரி மனேஜரின் வைப்பாட்டி. ஏழைப்பிராமணன் அவளிடம் சென்று "தாயே! நான் மிகுந்த கஷ்டப்படுகிறேன் உன்னைத்தவிர வேறு கதி எனக்குக் கிடையாது. நான் பிராமணன்; சம்பாதிக்க வேறு வழி இல்லை. அம்மணி! வேலை இல்லாமல் நெடுநாளாகக் கஷ்டப்படுகிறேன். மனைவி, மக்கள் பட்டினிகிடந்து தவிக்கிறார்கள் நீ ஒரு வார்த்தை சொன்னால் எனக்கு உத்தியோகம் கிடைக்காமற் போகுமா?" என்றான். பிராமணன் கஷ்டப்படுவதைக் கண்டு அவளுக்கு இரக்கம் உண்டாயிற்று ஆகவே "யாரிடம் சிபார்சு செய்ய வேண்டும்" என்று அவள் கேட்டாள். "தாயே! கச்சேரி மனேஜரிடம் ஒரு வார்த்தை சொன்னால் எனக்கு உத்தியோகம் கிடைப்பது நிச்சயம்" என்றான் பிராமணன். ரோஜாமணி அன்றைய இரவே கச்சேரி மனேஜரிடம் சொல்லி வாங்கித் தருவதாக வாக்களித்தாள் ஆச்சரியம்! மறுநாட் காலையில் மனேஜருடைய சேவகன் பிராமணனைக் கச்சேரிக்குக் கூட்டிப்போக வந்தான். "இவன் தகுந்த யோக்கியதை உடையவன். இவனை வேலைக்கு வைத்துக்கொள்வதால் நமது கச்சேரிக்கு நன்மை உண்டாகுமென்று எண்ணி இவனுக்கு ஓர் உத்தியோகம் கொடுத்திருக்கிறேன்." என்று மனேஜர் தன் மேலதிகாரிக்குச் சிபார்சு எழுதினார். புருஷர்களுக்கு ஸ்திரீகள் மீது உண்டாகும் பாசத்தின் மகிமை இப்படிப்பட்டது! உலகம் முழுவதும் பெண்ணாசையிலேயே மயங்கிக்கிடக்கின்றது.

(தொடரும் .....)

திருமதி செ. அருணானந்தம்

வீட்டுக்கு வந்த விருந்தாளிகளை உபசரித்து அன்னம் அளிக்காத இல்லறத்தான் உணர்ச்சியற்ற மிருகத்தைவிடக் கேவலமானவன்.

பணத்தால் முடியாததை மனத்தாற் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் தெய்வீக நினைவுப் பாமாலை

[ தொடர்ச்சி .........

பேர் கேட்ட வைத்தியரும் கைவிட்ட நோயாளர்
பார்போற்றும் சந்நிதியைச் சரணடைந்து - உளமுருகிப்
பரிந்து மனம்விரும்பி வருந்திக் கையெடுக்கச்
சுகங்கொடுக்கும் சுந்தரனே சந்நிதியானென்றறி.

கடவுள் சாமியவர் கந்தன் கருணைபெறச்
சந்நிதியிற் கடைவைத்து கடும்தவமிருந்து எண்ணம்போல்
கந்தன் கழலிணையைக் கலந்த பெருஞ்சிறப்பு
சந்நிதியான் பேரருள் என்பதனை அறி.

ஆடம்பரம் விரும்பாத அருள்ஞானக் கதிர்வேலன்
பூஜைப் பெருவேளை ஞானப்பறை ஒலிக்க அப்பனைப்போல்
அருள்ஞான நடமாடி அடியவரொடுங் கூட
அருள்நிலை தந்தருள் பவனே சந்நிதியானென்றறி.

அலங்காரப் பெருந்தேரை அன்பர்கள் செய்தளித்தும்
விரும்பாத சந்நிதியில் வேலவனார் - முன்போலப்
பூர்வீக நற்றேரை விருப்பாய்க் கொண்ட புகழ்
சந்நிதியான் அருட்செய்கை என்பதனை அறி.

சந்நிதியான் விரும்புவதை நாம் விரும்பிச் செய்துகொண்டால்
சஞ்சலங்கள் எவையும் எமையணுகா - எப்போதும்
பாரம் அவனுக்காய்ப் பணிசெய்தல் எம்கடனாய்
நீயென்றும் வாழ்ந்து இன்புற்றிரு.

சந்நிதியான் அருட்சூழல் முன்போலச் சிறப்பாகச்
சந்நிதியான் தொண்டர்கள் தினம்வந்து தரிசிக்கச் சந்நிதியில்
பேரன்புத் தொண்டுசெய்யும் சந்நிதியான் ஆச்சிரமம்
சிறந்தோங்க வேலவனை வணங்கிடுவோம் வாழ்த்திடுவோம் தினம்.


வ. சிவநேசன்

★ துன்பம் எல்லோரையும் திருத்தி விடும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவலிங்க ஸ்ரூபத்தின் இரகசியம்



வேதங்களாலும் முப்பத்து முக்கோடி தேவர்களாலும் அறியவோ, காணவோ முடியாத பேரறிவாக விளங்கும் பிரமஸ்ருபியாக இருக்கும் சிவபெருமான் உலகமாயையின் அகப்பட்டு பிறவிப் பெருங்கடலை நீந்திக்கடக்கத் தெரியாது தவிக்கும் ஆன்மாக்களை ஆட்கொள்ளும் பொருட்டுத் திருவுளமிரங்கி பிரம்மஸ்ருப நிலையிலிருந்து ஒருபடி இறங்கி அருவமாகவும், அருவுருவமாகவும், உருவமாகவும் என மூன்று திருமேனிகள் மூலம் அவர்கள் பக்குவத்திற்கேற்ப அருள் பாலித்து பாவ விமோசனம் அளிக்கின்றார்.

## அருவத்திருமேனி

அதாவது அருவத்திருமேனி என்பது பிரம்ம விஷ்ணுக்களாலும், காணவோ அறியவோ முடியாத பேரறிவாகிய ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெரும் சோதியாயுள்ளது

அது அருவுருவமானது சக்தியும் சிவமும் ஒன்றாய் இணைந்த சிவலிங்க மூர்த்தமாகும் எனவே சிவம், சக்தி, இந்திரன், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் முதலாய முப்பத்து முக்கோடி தேவர்களும் பஞ்சபூதங்களும் 36 தத்துவங்கள் பஞ்சகலைகள் 81 பதங்கள் 224 புவனங்கள் 51 எழுத்துக்கள் சப்தகோடி மகாமந்திரங்களும் தம்முள் அடங்கிய திருமேனியாகும். இதுவே சிவலிங்க மூர்த்தியாகும்.

## உருவத்திருமேனி

உருவத் திருமேனியாவது புவனங்கள் எல்லாவற்றிலுமுள்ள ஜீவராசிகள் அத்தனைக்கும் அன்பே உருவான அன்னையாகவும். அறிவு மயமான பிதாவாகவும் இருந்து பிள்ளைகளைப் பெற்று அன்பான அமுதத்தாலும் அறிவான செல்வத்தாலும் அவர்களை வளர்த்து ஆரோக்கியங்கள் நிரம்பிய தத்துவத்தின் ( முழுப்பொருளாகி ) முழுமையுமாகி அதற்குரிய வழிமுறைகளையும் காட்டி தந்தை தாயின் கடமை என்ன என்பதை உணரவைத்து அதன்படி நடக்க அன்னையும் பிதாவுமாகிய இருவரும் இணைந்து ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் மனச்சாட்சி

சூதாட்டத்தையும் சூதான உள்ளத்தையும் விரும்பாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக நின்று இயற்கை என்னும் இறைகட்டளைகளையும் மற்றும் ஜீவ ராசிகளின் உள்ளத்தில் ஜீவசாட்சியாகவும் நின்று தனது படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களைச் செய்து கொண்டிருக்கின்றார் என்பதைத்தான் உருவத் திருமேனியின் தத்துவம் விளக்குகின்றது.

உருவத் திருமேனி என்பது சகல உலகத்திலும் உள்ள மனிதர்கள் உட்படப் பிற சீவராசிகள் அத்தனைக்கும் உள்ளிருந்து இயக்கும் ஜீவன் என்ற அழியாப் பொருளும் உலகமனைத்தும் உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்த அழியாப் பரம் பொருளும் ஒன்றே என்பது ஞானிகள் கண்ட உண்மையாகும். இறைவனாற் சிருஷ்டிக்கப்பட்ட உருவங்கள் எல்லாவற்றிற்கும் அவரவர்க்குரிய முடிவுகாலம் நெருங்கி விட்டால் உள்ளிருந்து ஜீவன் என்ற பெயர் எடுத்து மறைபொருளாக அவ்வுடல்களை இயக்கி வந்த ஆன்மா உடலை விட்டுப்பிரிந்து ஏகமாய் எங்கும் நிறைந்த பரம் பொருளுடன் கலந்து விடுகிறது. அது சாதாரண மக்களால் மரணம் எனப்படுகின்றது. இதை மகாஞானிகள் வினைப்பயனால் எடுத்த உடம்பு வினை முடிந்து விட்டது. இனிமேல் தினைப் பொழுதும் இவ்வுடலில் தங்காது உயிர் தெய்வத்துவமடைந்து விட்டது என்று கடைசிக் கிரியைகளைச் செய்வார்கள். உயிரோ உயிரைத்தாங்கி வைத்திருந்த உடம்போ அழிவதில்லை ஆத்மா என்ற ஜீவன் அப்படியே இருக்க உயிர் உடல் எடுப்பதற்கு முன்னும் பின்னும் பிரியாமல் ஒன்றாய் இருந்து பரம் பொருளுடன் கலவாமற் கலந்து ஒன்றாகி விடும். இது எப்படி எனில் சமுத்திரத்திலிருந்து ஆவி என்றபெயருடன் மேல் எழுந்து மழைத்துளி என்ற பெயர் எடுத்துச் சமுத்திரத்தை நோக்கிக் கீழ்வரும் போது பின் தண்ணீர் என்றபெயருடன் சமுத்திரத்தில் ஒன்றாய்க் கலந்து மகா சமுத்திரம் என்ற பழைய பெயருடன் திகழ்கிறது.

பஞ்ச பூதத்தாலான இவ்வுலகத்தில் இயங்கும் ஜீவன்கள் முதல் சடப்பொருள்கள் வரை அழிவதுமில்லை. உண்டாவதுமில்லை நடைபெறுவது உருவ மாற்றமே ஒழியப் பிறிதொன்றில்லை. ஜீவனுள்ள மிருகமோ மனிதனோ இயங்க முடியாத நிலை ஏற்பட்டால் அந்த உடலை இது வரை இயக்கி வந்த இறைசக்தி பஞ்ச பூதங்களில் ஒன்றான அபான வாயுவின் உதவியினால் மற்றைய பூதங்களின் பாகத்தைப் பிரித்து எடுத்தது போலவே சேர்த்து விடுகிறது. பஞ்ச பூதங்களும் அழிவே இல்லாதன. அது போலவே இயக்கும் சக்தியும் அழியாமல் இருந்தது போலவே மீண்டும் இருந்தவிடத்துடன் ஒன்றாகி விடுகிறது.

என்றும் மறவாத நட்பே மெய்யான நட்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு உதாரணமாக மட் பாண்டம் செய்யும் ஒரு தொழிலாளி ஒரு 'பானை' யை மாத்திரம் உண்டாக்கிப் பாவனைக்கு விடுகிறான் இதை வாங்கியவர் பாவனைக்குட்படுத்துகிறார். அந்தத் தொழிலாளி நல்ல முறை செய்துள்ளார். அதில் தண்ணீர் நிரப்புவதற்கு எந்தவித உடைவோ வெடிப்போ இல்லை. சிறிது காலம் செல்லவே தற்செயலாகப் பானை உடைந்து விடுகிறது. பானை உண்டாக்கும் பொழுது மண்ணைக் கட்டியை எடுத்துத் தண்ணீர் விட்டுப் பிசைந்து பானை செய்ய முற்படும் பொழுது தொழிலாளி விரும்பியோ விரும்பாமலோ குடத்துக்குள் ஆகாசவெளி வைக்கிறார் என்பதை விட அது தானாகவே வந்து அமைந்து குடாகாசம் என்று காரணப்பெயர் பெற்று விடுகிறது. இந்தக் குடவெளி எப்படிப் பானைக்குள் வந்தது உடைந்த பொழுது எப்படி மறைந்தது இந்நிகழ்வுகள் பற்றி அன்பர்கள் சிந்தனைக்கு எடுக்குமாறு என அறிவுக் கெட்டிய வரை என் அபிப்பிராயத்தைத் தாழ்மையுடன் உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

அது பின்வருமாறு நிறைவான பஞ்சபூதக் கலப்பினால் படைக்கப்பட்டுள்ள மனிதன் என்ற பானையைத் தன் கருணையினால் எழுப்பி நடமாட வைத்தது. அதற்குள்ளிருப்பது சீவன் என்ற பெயரை வைத்து உள்ளும் புறமும் சிவமே நிறைந்து நின்று தானே பஞ்ச கிருத்தியங்களைச் செய்பவன் இதைத் தன்னுள் அறிபவன் கோடானு கோடி மக்களுள் ஒருவன் என்று ஞானிகள் கூறுவர். உலகம் உய்யும்பொருட்டு ஆனந்தத் தாண்டவம் செய்யும் நடராசரின் திருக்கூத்து.

மேலே கூறப்பட்ட பானை என்ற பொருள் மனிதனாகவும் அதற்குள் அமையப்பெற்ற வெளி ஆத்மாவாகவும் உடைந்த பானை வாய்க்கு மேலும் பானையைச் சுற்றி நின்ற பரந்த வெளியும் ஒன்றாய்க் கலந்ததை எவரும் காணமுடியாது கலந்தது போல் காட்சியளிக்கும் பானை வெளியும் பெருவெளியும் ஒன்றான நிகழ்வும் மனிதர் முதல் பிறவுயிர்களில் உள்ள ஆன்மாக்களும் வெளியாவதையும் எல்லை ஆட்கொள்ளப்படும் பரமாத்மாவுடன் ஒன்றாவதும் பிரிவதுமாகப் பிறப்பு இறப்புக்கள் நடைபெறுகின்றன.

சிவம்

முதுமைக்கு வேண்டியதை இளமையில் தேடிக்கொள்.
மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக்கொள்.

எண்ணத்தின் வலிமை - மனத்தின் மாயாஜாலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்

[தொடர்ச்சி.....

வறுமை நிலையும், அற்ப சலுகைகளும், ஆங்கிலமோகமும் திருமணத்தோடு உத்தியோகமும் உயர்வாழ்க்கையும் ஒன்றின்ன காரணங் களுக்காகச் சிவநெறிவிட்டு மதம்மாறிய பேர்களுக்காக இரங்கினார். யாழ்ப்பாணத்துச் சமயநிலை பற்றிச் சிந்திக்க வழிவிட்டார். புதிய புதிய புத்தகங்கள் தோன்றின. சைவ உண்மைக் கதைகள், புராண, இதிகாச தத்துவங்கள் அச்சுவாகனமேறின. ஆற்றல்மிகு தம் நாவளத்தால் மக் களனைவரையும் அரவணைத்தார். நாவலர் சண்டமாருதம் போல் உணர்ச்சி ததும்ப வைக்கும் தம் பிரசங்க மழையினாற் சைவப்பயிரைத் தழைக்க வைத்தார். ஆலயங்கள் உரிய முறையில் நடக்க வழிசெய் தது மட்டுமல்லாமல் மக்களிடையே சைவாசாரங்களும் சமயநெறியும் நற்பண்பாடுகளும் மிளிர வேண்டுமென்று கோவில்கள் தோறும், கல்விச் சாலைகள் தோறும் பிரசங்கமழை பொழிந்தார். நாவலரின் முயற்சிக ளொன்றும் வீண்போகவே இல்லை. தமிழன்னை புத்துயிர்பெற்று மகிழ்ந் தாள். மாற்றுமத மோகமும், ஆங்கிலவெறியும் ஓய்ந்தன. சைவப்பயிர் தழைக்கலாயிற்று. மக்கள் மனத்தில் தம்சமயம் பெருநெறி என்றும், தம் நெறிவாழ பாடுபட வேண்டுமென்றும் நினைக்கின்ற, போற்றுகின்ற எண்ணம் உருவாகியது. சுருங்கச் சொன்னால் இன்று, ஒரு ஆறுமுகநாவ லரைத் தமிழ்த்தாயின் காவலனாக சைவப்பணியின் சிகரமாக ஒரு தமிழ்ப் பேரறிஞனாக அகில உலகமும் போற்றக் காரணமாக இருந்தவர் அந்த கிறிஸ்தவ மகான் பேர்சிவல் பாதிரியார் என்றுதான் கூற ஆசைப்படு கிறேன். அத்தனையளவுக்கு ஆறுமுகநாவலருக்கு சைவநெறியை வளர்க்க வேண்டுமென்ற உணர்வு உள்ளத்தில் யாருமே ஏற்றாது உருவாகக் காரணமாய் இருந்தவர், சன்னதமுட்டியவர் பீற்றர் துரைமகனார்தான் என்றால் மிகையாகாது.

அந்த உத்வேகம்தான் சைவர்களுக்கென்று சைவ ஆங்கிலப் பாடசாலையொன்று உருவாகவும், சிதம்பரத்திலும், வண்ணார்பண்ணை யிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை உருவாக்கவும். காரணமா யிருந்தது என்றால் மிகையாகாது. நல்லைநகர் தந்தபெருமான் ஆற்றிய பணிகள் ஒன்றா இரண்டா! இளம் சைவர்களுக்காக அவரெழுதிய பாலபாடம் இரண்டாம் புத்தகத்திலே சைவப்பெருமக்களின் ஈடேற்றம் நோக்கி நாவலர் ஐயா கூறும் வார்த்தை ஒன்றே அவரது சமயப் பணி களை அளவிட நமக்குப் போதுமென்று கருதுகின்றேன்.

" இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது. நாம் கடவுளை
வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் "

---

★ நண்பர்கள் துயரத்தை எளிதாக்குகிறார்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே அவ்வரிய வாசகம். அவனி முற்றவுமே அறியும் அவரின் பணிகளை வார்த்தைகளில் அடக்க ஆற்றலின்மையால், அடங்குகிறேன்.

நாவிலும் போற்றும் நற்சான்றோன் நாவலரின் பெருமையையும் அவர்தம் சைவப்பணியின் சிறப்பையும் ராவ்பகதூர், சி. வை. தாமோதரம் பிள்ளை போற்றியவாறு,

" நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்து புராணாகமங்களெங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை "

என்று நாளும் பாடி ஏத்துவோம்.

பெருமானின் சிந்தனையிலுதித்த முத்துக்களை அனுசரிப்போம். சைவநெறி தழைக்க உழைப்போம். அதுவே நாவலரையாவுக்கு நாம் செய்யும் துதியுமாகும்.

( இளைய தமிழ் மாணவ தலைமுறையினரின் சைவ, தமிழ்ப் பேச்சு வன்மையை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்கள் மனதில் செறிந்துறும் நாவலர் பெருமான் பற்றிய சிந்தனையை வளர்க்கவும், பேச்சு ஆற்றலை ஊக்குவிக்கவும் நம் " ஆசிரியமணி " ஸ்ரீ தயானந்த சின்னத்தம்பி (க. க. ப. தமிழ்) அவர்கள் எழுதியனுப்பியிருந்த கட்டுரை - விடயதானம் - இது. )

**மல்லிகைப் பூவிற்கு மணம் ஏது?**

மல்லிகைப்பூவை மொட்டாக வாங்கும் போது அதற்கு மணம் இருப்பதில்லை. அது இரவில் பூக்கும்போது மணம் வீசுகிறது.

அந்த மணம் வெளியிலிருந்து வந்ததா? அப்படியானால் அதைக் காசு கொடுத்து வாங்கிவிடலாமே! இல்லை, வெளியிலிருந்து வரவில்லை. மலருக்குள் இருந்திருந்தால் அதுமொட்டாக இருக்கும்போது சிறிதளவேனும் வந்திருக்க வேண்டுமே அப்படியும் இல்லையே! பூக்கும்போது மணம் வருகிறதே. மல்லிகைப் பூவுக்கு அதுதான் விதி.

அதுபோல, நமது முன்வினை அதற்குப் பலன் கொடுக்க வேண்டிய நேரம் வரும்போது பலன் தரும். அதுதான் ' விதி ' என்ற பெயர் பெறுகிறது.

குறைந்த பேச்சே அதிகம் வேலை செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தி

வந்தியின் சரித்திரம் ஹாலாஸ்ய புராணம் என்று வடமொழியிலும் திருவிளையாடற் புராணம் என்று தமிழிலும் பேசப்படுகிறது. பரஞ்சோதிமுனிவராற் பாடப்பெற்றது. சிவபெருமான் மதுரையில் நடாத்திய 64 திருவிளையாடல்களில் ஒன்று. முருகப் பெருமானால் அகத்தியருக்குச் சொல்லப்பட்டு அகத்தியராற் பிறமுனிவரும் அறிந்தது. இப்புராணத்தைப் பரஞ்சோதிமுனிவர் செய்யுள் வடிவில் தான் பாடினார். திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள், பட்டுச்சாமி ஓதுவார், மதுரை மீனாக்ஷி சுந்தரேசபட்டர் ஆகியோர் உரைநடையில் எழுதியுள்ளனர். பெரியபுராணம் போன்று இதுவும் தமிழிலிருந்து வடமொழியில் எழுதப்பட்டது.

வந்தியின் சரித்திரத்துடன் வாதவூரரான மணிவாசகப் பெருமான் சரித்திரமும் இணைந்திருக்கிறது வாதவூரர் பாண்டிய அரசரின் மந்திரியாயிருந்தவர். குதிரைகள் வாங்க அரசன் அரிமர்த்தன பாண்டியன் பொன் கொடுத்து வாதவூதரரையும் காவலாட்களையும் அனுப்பினான். இவரை ஆட்கொள்ள நினைத்த சிவபிரான் திருப்பெருந்துறைக் கோவிலில் குருந்தமரத்தடியில் தக்ஷிணாமூர்த்தி கோலத்தில் அமர்ந்தார். இவ்வூர் இப்போது ஆளுடையார் கோவில் என அழைக்கப் பெறுகிறது. அறந்தாங்கியிலிருந்து சுமார் ஏழு மைல் தூரத்திலுள்ளது.

வாதவூரர் திருப்பெருந்துறையில் சிவதீர்த்தத்தில் நீராடி விட்டுக் கோவிலிற் பெருமானை வணங்கச் சென்றார். பிரகாரத்தை வலம் வரும் போது குருந்தமரத்தடியில் சிஷ்யர்களுடன் கையில் சிவஞானபோதம் எழுதிய சுவடி தாங்கிய அருள்வடிவமான சிவபிரானைக் குரு வடிவிற் கண்டார். அவர் அருகிற் சென்றார். இறைவனோ தன் அழகிய திருக்கரத்தினை வாதவூரர் சிரசில் வைத்துச் சூக்சும பஞ்சாட்சரத்தை உபதேசித்து உள்ளும் புறமும் சிவவடிவமாகச் செய்தார்.

( என்னையும் ஒருவனாக்கி இருங்கழல் சென்னியில் வைத்த சேவக போற்றி ) என்றும் ( பெருந்துறையான் சீரார் திருவடி என்றன் மேல் வைத்த பிரான் ) என்றும் கூறும் திருவாசக அடி நோக்கத்தக்கது.

---

★ இன்பம் கனவில் இல்லை வாழ்க்கையில் தான் இருக்கிறது. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட வாதவூரருக்கு மணிவாசகன் என்று பெயர் சிவபிரானே அளித்தருளினார். சிவபெருமான் மறைந்து விட்டார். மணிவாசகப்பெருமான் காவலாட்களை ஊருக்கு அனுப்பி விட்டுக் கொண்டு வந்த பொன்னை இறைவன் குடிகொண்ட கோவில்களைச் செப்பனிடவும் திருவிழாக்களுக்கும் செலவழித்து விட்டார்.

குதிரைகளும், வாதவூரரும் வராதுபோகவே பாண்டியன் வாதவூரருக்கு ஓலையனுப்பினான். மணிவாசகப்பெருமானோ சிவபிரான் சொன்னபடி ஆவணிமாத மூலநாளில் குதிரைகள் வரும் என்று அரசனிடம் வந்து சொன்னார்.

குதிரைகள் வராது போகவே அரசன் மணிவாசகப் பெருமானைச் சிறையிலடைத்தான். சித்திரவதை செய்தான்.

எந்தாய் அனைத்துலகும் ஈன்றாய்; எத்தேவர்க்கும் தந்தாய். செழுங்குவளைத் தாராய் பெருந்துறையில் வந்தாய் மதுரை திருவாலவாயுறையுஞ் சிந்தாமணியே சிறியேற்கு இரங்காயோ என்று பல பாடல் பாடினார், கதறினார்.

அவர் அன்பிற்கு இரங்கிய சிவபிரான் வாதவூரர் கனவில் தோன்றி நாளைக்காலை குதிரைகள் வரும் என்றார். மணிவாசகர் சொல்ல அரசனும் அவரை விடுதலை செய்தான்.

சிவபிரான் காட்டிலுள்ள நரிகளைக் குதிரைகளாக்கி சிவகணங்களை வீரர்களாக்கி, தாமே தலைமையேற்று, குதிரைகளை நடாத்தி வந்ததுடன் குதிரைகளின் சிறப்பையும் வர்ணித்தார். குதிரைகளின் அழகைக் கண்டு அரசன் அவருக்குப் பரிசுகள் வழங்கி அனுப்பிவிட்டுக் குதிரைகளை இலாயத்தில் கட்டச் சொன்னான்.

இரவு அத்தனை குதிரைகளும் நரிகளாகமாறி மற்றைக் குதிரைகளைக் கடித்துவிட்டு ஊளையிட்டுக்கொண்டே காட்டை நோக்கி ஓடிவிட்டன. விடிந்ததும் ஜனங்கள் முறையிடவே அரசன் மறுபடியும் வாதவூரரை கைது செய்து சாட்டையாலடித்துச் சிறையில் அடைத்தான். அவரோ கதறினார்

நாத, நாதமுடிபாய் இருந்த நாடகஞ் செய்பாத பாதுகையமென்னைப் பணி கொண்ட வேத, வேதமுடிவின் விளைந்த தனிப்போத, போத நெறி கடந்த பூரண எனப் பல சொல்லியழுதார்.

சிவபிரான் பாண்டியன் தெளியவும், தமது முடியில் வைகையாற்றின் மண் ஏறவும் வந்தி என்ற மூதியவளின் பக்தி பலர் அறியச் செய்து பூத உடலோடு முத்தி அடையவும் செய்ய நினைத்தார்.

நேர்மையானவர்களிடம் அதிகம் பணிவு இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாட்காலை வைகை ஆற்றினைப் பெருகச் செய்தார். உடனே மதுரை மாநகரமே மூழ்கும்படியாகக் கரை உடைந்து பெருகலாயிற்று. பாண்டியன் அமைச்சரை வெள்ளத்தை அடைக்க வழி செய்யச்சொன்னான். அமைச்சரும் மக்கள் வீட்டிற்கு ஒரு ஆள் வைகைக் கரை அடைக்க அளந்து கொடுக்கச் சொன்னார் அதிகாரிகளை.

நகர மக்கள் உத்தரவை நிறைவேற்றப் புறப்பட்டனர். மதுரை நகரில் ஆயிரம் பிறை கண்டு தொழுதவளும், நரைமூதாட்டியுமாகிய வந்தி என்பவள் இருந்தாள். ஆயிரம் பிறை கண்டவர் என்று நாம் எண்பது வயதுடையவரைச் சொல்லுகிறோம். ஆனால் வந்திக்கு நூறுவயது என்கிறார் புராணகாரர். வந்திக்குப்பிட்டுவாணிச்சி என்ற பெயரும் உண்டு.

பிட்டை முதலில் கோவிலில் சுந்தரேஸ்வரர் மீனாக்ஷி தேவிக்கு நிவேதனம் செய்துவிட்டு பக்தர்களுக்கும் சிறிது கொடுத்துவிட்டுப் பிட்டு விற்றுப் பிழைத்து வந்தாள். அவள் திருமணமானதாக திருவிளையாடற் புராணத்திலில்லை.

வீட்டிற்கு ஒருவர் வைகைநதி அடைக்க அளந்து விட்டிருப்பது கேட்டு வருந்தினாள் அன்றாடம் தான் வணங்கும் சுந்தரேஸ்வரனைத் தியானித்தாள். ''சோமேசா எனக்கோ, நாயகனோ, மக்களோ எவருமில்லை. எப்படி வைகைநதி அடைப்பேன். யாராவது கூலியாள் என் பங்கை அடைக்க வருவானோ கண்டிலேனே'' என்று வேண்டினாள்.

சோமசுந்தரப் பிரானே அழுக்கு ஏறிய துணியை இடையிற் சுற்றி தலையில் சும்மாடு சுற்றி கையில் கூடை மண்வெட்டியுடன் வந்தி இருக்கும் தெருவில் வந்து ''கூலி கொடுத்து என்னை வேலை கொள்வார் உண்டோ'' என்று கூவினார்.

வந்தி மகிழ்ச்சியுடன் வெளியில் வந்து அவனைக் கூவி அழைத்தாள். ''அப்பா' எனக்கு விட்டிருக்கும் கரையை அடைத்துத் தருவாயா? என்று கேட்டாள்.

இறைவனோ ''தாயே' அடைத்துத் தருகிறேன் எனக்குக் கொடுக்கும் கூலியாது? ''என்று கேட்டான்.

''அப்பா நானோ ஏழை! தினம் நான் செய்து விற்கும் பிட்டையே கூலியாகத் தருகிறேன்'' என்றாள் வந்தி.

இறைவனும் ''அன்னையே, எனக்குக் கொஞ்சம் பிட்டுத்தாரும் சாப்பிட்டுவிட்டுப் போகிறேன்'' என்றார்.

★ பழி வாங்கும் மனோ பாவத்திற்கு ஞானக்கண் கிடையாது ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியும் கொடுத்தாள். சாப்பிட்டுவிட்டுப் போய் வந்தியின் கூலியாள் வைகைக் கரையில் வழுதிவிட்டுக்கரையினை அடைக்கத் தொடங்கினார். ஒரு கூடை கொட்டிவிட்டு ஆடிப்பாடிக்கொண்டே மரநிழலிற் போய்ப் படுத்து விட்டார். எழுந்ததும் மறுபடியும் வந்து வந்தியிடம் பிட்டுத்தருமாறு கேட்டார். அவளும் சுடச்சுடப் பிட்டுக் கொடுத்தாள். கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு மீதியைத் துணியில் முடிந்துகொண்டு வேலை செய்யும் இடம் வந்ததும் ஆடிப்பாடிக் கொண்டிருந்தார்.

அதிகாரிகள் பார்த்து எல்லா இடமும் அடைபட வந்திக்குரிய இடம் அடைபடாது கூலியாள் போகாது இருப்பதைப் பார்த்ததும் பாண்டிய னிடம் போய்ச் சொன்னார்கள். அரிமர்த்தன பாண்டியன் ஓடி வந்தான். "அந்த ஆளைக் கூட்டி வாருங்கள்" என்றான்.

காவலரும் பரமனைக் கூட்டி வந்தனர். "இவன் தான் வந்தியின் கூலியாள்" என்றனர். அரசன் கோபத்துடன் பொற் பிரம்பால் இறைவன் முதுகில் வீசி அடித்தான். உடனே இறைவன் தன்கைக்கூடையிலிருந்த மண்ணை வந்தி கரையிற் கொட்டிவிட்டு மறைந்தான். என்ன ஆச்சரியம்! கரை ஒழுங்கு பட்டு விட்டது. வைகை சீற்றமே தணிந்து கரை மேல் பட்டு விட்டது. அத்துடனில்லாமல், பாண்டியன் அடித்த அடி, அரசன் முதுகிலும் அமைச்சர் காவலர் முதுகிலும், அத்தனை ஜீவராசிகள் முதுகிலும்பட்டது. திருமால் திடுக்கிட்டுத் தன் அரியணையில் விட்டெழுந்தார். பிரம்மதேவர் படைப்பினைவிட்டு ஒரு கணம் இது என்ன என்று வியந்தார். வானவர் நாடே அதிர்ந்தது.

(முடிமேற மண்சுமந்தாய்; முதுகிலடி வடுப்பட்டது; அடியேனும் பட்டேன்; நின் திருமேனி நோவேனோ; கடையானேன் வெகுண்டடித்த கைப்பிரம்பும் உலகெல்லாம் உடைபடவே பொறுத்ததோ உன்னருமைத் திருமேனி.)

(திருவாசகம்)

இதைக்கண்டு காவலர் வந்தியிடம் ஓடினர். அவளை உடனே பாண்டியனிடம் வரக் கூப்பிட்டனர். அவளோ "ஐயோ கூலியாள் என்ன செய்தானோ" என்று வருந்தினாள். மறுகணம் வானிலிருந்து சிவ கணங் கள் விமானத்தில் இறங்கினர் "அம்மா, உம்மைக் கைலாயம் அழைத்து வரக் கட்டளை ஏறுங்கள்" எனக்கூறி வந்தியை விமானத்தில் ஏற்றிக் கொண்டு மேலே சென்று மறைந்தனர்.

காவலர் ஓடி வந்து இதைச் சொன்னார்கள். வியப்படைந்திருந்த மன்னன் திகைத்து நிற்கும்போது வானில் சுந்தரேஸ்வரர் தோன்றிச் 'செங்கோல் வழுவாத பாண்டியனே, உன் பொருள் தருமவழியில் தேடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. தரும வழியாக எமக்கே செலவழிக்கப்பட்டது. நீ வாதவூரருக்கு இழைத்த அநீதியாலேயே வைகை பொங்கியது. உனக்குப்புத்தி புகட்டவே நரிகளைப் பரிகளாக்கி அன்று நாமே குதிரைக்காரனாக வந்தோம். வாதவூரரைப் போல வந்தியும் என்பக்தை; அவள் பெருமை உலகு அறியச் செய்யவே நாம் கூலியாளாக வந்தோம். அவளும் நம் பதம் வந்து விட்டாள். நீ விசாரியாது என்னை அடித்தாய். உலகமே நீ உட்பட அந்த அடியைத் தாங்க நேர்ந்தது. இனி வாதவூரரை நேர்மையாக நடாத்து' என்று கூறி மறைந்து போனார்.

அரசனும் மனம் தெளிந்து வாதவூரரால் இறைவனைக் காணப் பெற்றோமே என்று ஓடிவந்து வாதவூரரை வணங்கி மன்னிப்பு பெற்றான். மாணிக்கவாசகரும் நடந்தது கேட்டு மகிழ்ந்து சோமசுந்தரரை வணங்கிவிட்டுத் தில்லையம்பதி நோக்கிச் சென்றார்.

தொகுப்பு : சந்நிதியான் ஆச்சிரமம்

## ஒன்பது வகையான பக்தி வாழ்க்கை முறை

1. பக்திமான்களுடன், பாகவதர்களுடன் கூடிவாழ்தல்
2. பகவான் லீலைகளின் கதைகளைக் கேட்டு ஆனந்தமடைதல்
3. புகழுக்கு ஆசைப்படாமல் குருவைச் சேவித்தல்.
4. தூய்மையான உள்ளத்துடன் பகவத்குணங்களைப்பாடுதல்
5. முழுநம்பிக்கையுடன் வேத மந்திரங்களையும் பகவத் நாமாக்களையும் ஜெபித்தல்
6. தன் அடக்கத்துடன் நல்வழி நடந்து உலக காரியங்களைக் குறைத்து புண்ணிய புருஷர்களின் கடமைகளில் ஈடுபடுதல்.
7. உலகம் அனைத்தையும் ஆண்டவனின் உருவம் என்று எண்ணி அடியார்க்குத் தொண்டு புரிதல்.
8. கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைதல் கனவிலும் கூடப் பிறரிடம் குறைகாணாமல் இருத்தல்.
9. எளிய முறையை மேற்கொண்டு சந்தோஷமோ, துக்கமோ, ஏமாற்றமோ இல்லாமல் எப்போதும் கடவுளையே நம்பி வாழ்தல்.

வீட்டிலே குழந்தைகள் போலத் தோட்டத்தில் மலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவிப்பிணி தீர்க்கும் மருந்து

இப்போது நிலவுலகின்கண்ணே பிறவி எடுத்த நாம் அதாவது மானுடப்பிறவி எடுத்த நாம் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்றாக வேண்டும். அதற்கு நாம் யாது செய்தல் வேண்டும்? இந்த மனித உடலை எமக்குத் தந்து பூமியில் உலவவிட்ட எல்லாம் வல்ல பரம்பொருளைத் துதித்தல் வேண்டும்.

"அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். ஆகவே, மனிதப்பிறவி வாய்க்கப்பெற்ற நாம் புண்ணியஞ் செய்தவர்கள் ஆவோம். இந்தப் பிறவிப் பெருங்கடலினின்றும் நீந்திக் கரை சேருவதாயின் இறைவனைத்தான் பற்றுக் கோடாய்ப்பிடித்தல் வேண்டும். வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிசெய்து வழிபடல் எமது தலையாய கடனாகும்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - நீந்தார்
இறைவனடி சேராதார்."

என்று வான்புகழ் வள்ளுவப் பெருந்தகை கூறியது போல் இறைவனுடைய நாமத்தைச் சொல்லி அவன் திருவடிகளை நாம் அடைந்து விடலாம்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற மணிவாசகர் கூற்றுப்படி அவனுடைய நாமத்தை உச்சரித்து அவனை வழிபாடியற்றவும் அவனுடைய திருவருள்தான் முன்னிற்க வேண்டும். வாழ்க்கையில் நாம் செய்கின்ற நல்வினை, தீவினைக்கேற்பவே பிறவி வாய்க்கப் பெறுகின்றது "புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்த அவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்" என்றதன்படி புண்ணியம் செய்யத்தக்கது. பாவம் விலக்கப்பட வேண்டியது "அறஞ்செய விரும்பு" என்று ஔவையார் சொன்னவாறு நாம் அறஞ்செய்யப் பழகவேண்டும்.

"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலினூங் கில்லைக் கேடு"

என்ற பொதுமறை இங்கு நோக்கத்தக்கது. தர்மம் தலைகாக்கும்; தக்க சமயத்தில் உயிர்காக்கும் என்பார்கள். ஆகவே, நாம் கலியுகத்தில் அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தைச் செய்தல் வேண்டும்.

---

★ சிரிப்பும், அழுகையும் வாழ்க்கையின் தோழர்கள். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கீதோபதேசத்தில் என்ன சொல்லியிருக்கின்றார். "கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே. யுகங்கள் தோறும் நான் அவதரிக்கின்றேன்" "துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன" அதாவது கெட்ட குணம் நிரம்பிய துஷ்டர்களை அழித்தொழித்து நம்மிடத்தில் நேயமுள்ள பக்தர்களைக் காப்பாற்றி அவர்களுக்கு நேரும் இடர்களையும் துன்பங்களையும் நீக்குவதாகும் என்பது தான்.

யோகர்சுவாமிகள் கூறியிருக்கின்றார். "அது எப்பொழுதோ முடிந்த காரியம்" என்று இதில் எவ்வளவு ஆழ்ந்த கருத்து உள்ளே பொதிந்திருக்கின்றது பார்த்தீர்களா! நியதி என்ற ஒன்று இருக்கத்தான் செய்கின்றது. அந்த நியதியை யாற்ற யாராலும் முடியாது. ஆனால் விதியை மதியால் வெல்லலாம் என்று ஒரு கூற்று நிலவுகின்றது. அவ்வாறு விதியை வெல்வதற்கும் இறைவன் திருவருள் தான் வேண்டும். நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் பிறிது ஒன்று நினைக்கின்றது என்பார்கள். அதுவும் உண்மைதான். நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் பின்பு தெய்வத்திற்கு அங்கே வேலையில்லாமற் போய்விடும்.

கடவுள் நம்பிக்கையும் இறை சிந்தனையும் ஒருவனுக்கு என்றும் இன்றியமையாதன. தெய்வம் என்பதோர் சித்தம் உண்டான பின் உலகம் மாயையாகத் தோற்றமளிக்கும். எதிலுமே பற்றற்ற ஒரு நிலை "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்ற பட்டினத்தார் வாழ்க்கையின் சாராம்சத்தை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

"ஆசையறாய், பாசம் விட்டாய், ஆன சிவபூசை பண்ணாய்,
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்"

என்ற வரிகள் நமக்கு ஆழ்ந்த கருத்தோடு நல்ல தத்துவத்தையும் உணர்த்தி நிற்கின்றன. "ஆசை அறுமின் ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசை அறுமின்" என்பதையும் நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

ஆசையே பிறவிக்குக் காரணம். ஆகவே, ஆசையை அறவே ஒழித்தல் வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மூலகாரணமாய் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஒளிவீசித் தனக்கேயுரிய தனித்துவமான சக்தியாக மிளிர்பவன் இறைவன்.

அவனுடைய நாமத்தை உச்சரிப்பதன் மூலம் நாம் இப்பிறவிக் கடலை நீந்தலாம். புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்

---

★ கர்மங்களின் தொகுதி பிறவிச்சுழல் எனப்படும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் என்று சிவ புராணம் பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

“நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாது ஒரு போதும் இருந்தறியேன்” என்றார் நாவுக்கரசர் பெருமான். மறந்தால் தானே நினைப்பதற்கு “உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்” என்கின்றார். ஆகவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நாமபஜனை செய்வதன் மூலமே கடவுளை அடைய முடியும். கூட்டுப் பிரார்த்தனையே இதற்கு ஒரே வழி. இன்றுமுதல் சைவ மக்களாகிய நாம் அனைவரும் ஒன்று கூடி நாமஜெபம் செய்து, உலக பந்தபாசங்களிலிருந்தும் விடுபட்டுப் பேரின்ப வீடாகிய இறைவனின் பாதகமலங்களை அடைந்து ஆன்ம ஈடேற்றம் பெறுவோமாக.

“நாமஞ் சொல்லுவோம், நமனை வெல்லுவோம்”

சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்

## தொண்டு

உதவி என்ற நிலையை விட உயர்ந்ததும் உன்னதமானதும் தொண்டு. இவ்வாறான உயர்வும், சிறப்பும், புனிதமும் இந்தத் தொண்டிற்கு இருப்பதனால்தான் அதனை எமது சமயம் ஆலயத்துடனும், இறைவனுடனும் தொடர்புபடுத்துகின்றது. இறைதொண்டில் இருப்பவனைத் தொண்டன் என்று கூறுகின்றோம்.

இவ்வாறான இறைதொண்டில் ஈடுபடுபவன் தன்னை ஆத்மீகரீதியில் வளர்த்துக்கொள்ளுகின்ற அதேநேரம் சமூகமும் அவனால் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

கந்தசஷ்டிக்காலச் சிறப்பு நிகழ்வில்
ஆசிரியர் தி. இராகவன்

அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மறுவில் கற்பின் வாணுதல் கணவன்

மதன் உடை நோன் தாள். -

சூரிய ஒளி, சந்திர ஒளி, அக்கினி ஒளி, விளக்கு ஒளிக்கு உவமன் இல்லாத முருகப்பெருமானுடைய மேனிகொள் ஒளியை விளக்கிய பரிசில் பெற்ற இரவலன் மேலும் உணர்த்தத் தொடங்குவார்.

திருமுருகனுடைய திருவடி மேன்மையைச். செப்ப எடுத்துக் கொள்கின்றார். திருமேனி அவயவங்களில் ஒன்றைவிட மற்றொன்று சிறப்புற்றிருந்தாலும் இங்கு அடியவர்களுக்குத் திருவருள் ஞானம் வழங்குவதால் திருவடியை உணர்த்துகின்றார்.

திருவடி ஞானத்தை உணர்த்த வந்த அப்பரடிகள் திருவடித் திருத்தாண்டகம் என ஒரு திருப்பதிகம் அருளிச் செய்வார்.

"அரவணையான் சிந்தித் தரற்றும்மடி அருமறையான் சென்னிக் கணியாமடி. சரவணத்தான் கைதொழுது சாரும்மடி ....." என அமையும்.

"நன்னலத்த திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்லவாறே."

"பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே....."

நமக்கு இறைவன் தலையைத் தந்தது தமதுதிருவடியைச் சுமக்கத் தானோ என்று எண்ணும் அளவிற்குத் திருவடிஞானம் பெற்றவர்கள் திருவடியைப் பேணுதல் அமையும்.

நமக்குக் கால்கள் உடலைச் சுமப்பதற்கும் உலாவுவதற்கும் உதவும்.

முருகப்பெருமானுடைய திருப்பாதங்கள் தம்மைச் சரணம் என அடைந்தவர்களைத் தாங்குகின்றன. அதனால் அப்பாதங்கள் — வலிய பாதங்கள் — அழகிய பாதங்கள் — அடைந்தவர்க்கு அருளும் அழகிய வலிய பாதங்கள் என்று போற்றப்படுவன.

நக்கீரருடைய சங்கத் தமிழில், "உறுநர் தாங்கிய மதன் உடை நோன்தாள்" என அமையும்.

---

★ கண்ணீரில்லாத துக்கம் உள்ளே உதிரம் வடிக்கும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைச் சேர்ந்தவர்கள் தீவினையைப் போக்கி அவரைத் தாங்கிய அதிபாரமையை உடைத்தற்குக் காரணமாகிய வலிமையுடையதாம் என நச்சினார்க்கினியர் உரை அமையும்.

கருணையே திரு உருவான கந்தப்பெருமான் கற்பனை கடந்த சோதியானவர். அவருடைய திருப்பாதங்கள் இருவினையை நீக்கி அன்பை, தஞ்சம் என அடைந்தவர்களுடைய மும்மலங்களையும் சித்த விருத்தியையும் உடைப்பதுமான வலிமையுடையன என்று இன்புற எடுத்துரைத்த அருள் பெற்றவர் பின்னர் முருகப்பிரானுடைய திருக்கரத்தை விளக்குகின்றார்.

செல்லுறழ் தடக்கை:-

திருவடிகள் அடைந்தவர்களை ஆள்வன. மாறாக அடங்காதவர்களை அடக்குவன — தேய்த்துவிடுவன திருக்கரங்கள். பகைவர்கள் எதிர்த்து எழுவார்கள். அவர்களை நாசம் செய்வன திருக்கரங்கள்.

'' ... எம்மோடுடன் அமரி யற்றியே
சோகம் அடையாமை ஆவி பாவியாய்
ஏகுதி பாலக —'

என்று ஏளனம் பேசி எக்களித்து எதிர்த்து வாலகையாம் குமரவேள் முன்னராக வலிந்து வந்தான் தாரகன்.

'' ... — இவன் மீண்டேகுறி திண்ணுயிர் விட்டனன் .......'' என்று விளம்பி அவ்வேலை சிங்கமுகாசுரன் சினத்துடன் சீறினான். சிங்காரவேலன் முன்பு செருவினைப் புரிந்தான்.

''... — தன்னிகரில்லாச் சூரன்

வாட்படையுளக்குளமிர் கடவுளர் இரியல் போக நூறட்டியல் செருக்கில் வந்தான் ஞானநாயகன் தன் முன்னர். பகைவர்களை எல்லாம் செவ்வேள் பெருமான் தமது இடிபோன்ற கரங்களினால் அழிப்பவர். அதனால் வடிவேல் அழகரின் திருக்கரம் --

''செறுநர் தேய்த்த செல்லுறழ் தடக்கை!

அழிக்கற்குரியாரை அழித்த இடியை மாறுபட்ட பெருமையினை யுடைய கைகள்.

முருகப் பெருமானுடைய செவ்விய திருக்கரங்களுடைய திருச்செயலைச் செப்பிய அடியவர் தெய்வயானை அம்மையாருடைய திருமணவர் என்பதனை அடுத்த வரிகளில் உணர்த்துகின்றார்.

எதை நாம் அறியவில்லையோ, அது நம்முடையதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள் நுதல் கணவன்:-

"மறுவில் கற்பின் வாணுதல் கணவன்"

மறக்கற்பில்லாத அறக்கற்பினையும் ஒளிபொருந்திய நுதலினையுமுடைய தெய்வயானையார் கணவன். முருகப்பெருமான் கற்பு ஒன்றாக இருந்தாலும் செயல்வேகம் பற்றி இரண்டு என வகுப்பர் ஆன்றோர். அவை அறக்கற்பு மறக்கற்பு என்பன. மறக்கற்பு சீறிய கற்பென்றும், கொடுங்கற்பென்றும், அறக்கற்பு ஆறியகற்பென்றும் அருட்கற்பென்றும் வழங்கப்பெறும். வீரபத்தினி மறக்கற்புடையாள்; கோப்பெருந்தேவி அறக்கற்புடையாள் ஆக ஆறியகற்பும் சீறியகற்புமெனக் கற்பு இருவகை. சிலப்— பதிகம் 38 - 54 அடியார்க்கு நல்லார் உரையை எடுத்தாள்வர் — மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள்.

தெய்வயானையார் தெய்வப் பெண்ணங்கு மானிடத்திற்கு மேலானவர். அவர் கற்பு அறத்திற்கும் மறத்திற்கும் மேலாக உள்ளது அருட்கற்பு எனலாம்.

கந்தமலையினிடமாக முருகப்பெருமானார் வள்ளி நாயகியாருடன் வந்தபோது அவர் கூறும் வாக்கு அருட்கற்பினை வலியுறுத்தத் தக்க சான்றாகும்.

"—...... இவளும் யானும்
எல்லையில் காலம் நீங்கியிருந்தனம் இருந்திட்டேமை
ஒல்லையில் இங்ஙன் கூட்டியுடனுறுவித்த வுன்தன்
வல்லபம் தனக்கு யாஞ்செய் மாறுமற்றில்லை யென்றாள்"
(வற் திருமணம் — 252)

நங்கையர்க்கு ஒளிபொருந்திய நெற்றி அழகு கற்பு அழகிற்கு மேலும் மெருகு ஊட்டுவது. அழகும் கற்பும் சிறந்த தெய்வயானையார் திருக்கணவர் என்றால் அது முருகப்பெருமானுடைய மேன்மைக்கும் மேன்மைக்கும் மேன்மையாவது வள்ளுவனாரும்.

"புகழ்புரிந் தில்லிலோர்க்கு இல்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடுநடை" (9)

எனக்கூறிய குறளும் ஒப்பிட்டு நோக்கற்பாலது.

முருகப்பெருமான்- ஒளிமயமானவர். நோன்றாள் உடையவர். செல்லுறழ் தடக்கையர். வாள்நுதல் கணவனாவார். என்று உணர்த்திய அருற்பெறும் அடியவர் பின்னரும் மொழியத் தொடங்குவார்.

சிவ. சண்முகவடிவேல்

---

உலகம் யாத்திரிகளின் சத்திரம்.


---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

நீர்பாசனை அம்பலவோடை என்ற முகவரியிலுள்ள செல்வி சுஜிந்தா கணபதிப்பிள்ளை இறைபக்தியுள்ள ஒரு மாணவி. இவர் சந்நிதியானை நம்பிக்கையுடன் வழிபட்டு அனுபவித்த அற்புத அனுபவங்களை அடியார்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதாக எமக்கு எழுதி அனுப்பியுள்ளார்.



செல்வி சுஜிந்தா கணபதிப்பிள்ளை 1996-ஆம் ஆண்டு க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு தோற்றி க. பொ. த. (உ. த.) வகுப்பில் கல்வி கற்பதற்கு தேவையான திறமைச்சித்திகளைப் பெற்றிருந்தாலும் கணித பாடத்தில் சித்தியடையத் தவறிவிட்டார். இதனால் இவர் க. பொ. த. (உ. த.) வகுப்பில் கல்விகற்றுக்கொண்டு 1997–ஆம் ஆண்டு கணித பாடத்திற்கு தோற்றியிருந்தார். ஆனாலும் அவரால் கணித பாடத்தில் சித்தியடைய முடியவில்லை. இந்த நிலையில் அவரது க. பொ. த. (உ. த.) கல்வியும் கேள்விக்குறியானது. அழியாத செல்வம் கல்விச் செல்வம். அதனால் அந்த கல்விச்செல்வத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டு

கடமைகள் நிறைவடையலாம், நிகழ்ச்சிகள் இடைவழுப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று இளமையிலிருந்தே அதற்காக தன்னை தயார்ப்படுத்திக் கொண்டு வந்த அந்த மாணவிக்கு குறிப்பிட்ட அந்த பாதகமான பரீட்சைமுடிவு மனதிற்கு மிகவும் வேதனையைக் கொடுத்தது. ஆனால் அசையாத நம்பிக்கையுடன் உள்ளம் உருகி வழிபடுகின்ற அடியவர்களுக்கு கேட்பவற்றை எல்லாம் அள்ளி வழங்குகின்ற அருட்கந்தன் சந்நிதியான் என்பதை ஏற்கனவே அறிந்திருந்த இந்த மாணவியும் சந்நிதியானே தஞ்சமெனமுடிவு செய்து முருகப்பெருமானை உள்ளம் உருகி வழிபட ஆரம்பித்தார்.

அதுமட்டுமன்றி கணிதபாடத்தில் சித்தியடைந்து தனது க. பொ. த. (உ. த.) கல்வியை தொடர்வதற்கு சந்நிதியானுக்கு நேர்த்தியும் செய்து தனது பக்தியை மேலும் உறுதியாக்கிக் கொண்ட செல்வி சுஜிந்தா 1998-ஆம் ஆண்டு மீண்டும் கணிதபாடத்திற்கு தோற்றியிருந்தார். அந்தப் பரீட்சையில் அவர் சித்தியடைந்தது மட்டுமல்ல எதிர்பாராத அளவு தரத்தில் அதாவது திறமைச்சித்தியை அடையும் நிலையும் அவருக்கு கிடைத்தது. இதனால் தற்பொழுது அவர் க. பொ. த. (உ. த.) வகுப்பில் திருப்தியுடனும் நம்பிக்கையுடனும் கல்வியைத் தொடருகின்ற ஒரு மாணவியாகக் காணப்படுகின்றார்.

பரீட்சைமுடிவு கிடைத்தவுடன் சந்நிதி முருகனுக்கு தான் நேர்த்தி வைத்தபடி இரண்டு வெள்ளிக்கிழமைகள் வீட்டில் இருந்து விரதம் அனுஷ்டித்து மூன்றாவது வெள்ளிக்கிழமை தனது விரதத்தை நிறைவு செய்வதற்காக தனது தந்தையாருடன் சந்நிதியானிடம் வந்தடைந்தார். செல்வி சுஜிந்தா அங்கே தனது சிநேகிதியை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவரது சிநேகிதி வீடு திரும்பிச்செல்வதற்கு வரவேண்டிய இ. போ. ச. பேருந்துவண்டி தாமதமாக வந்ததினால் செல்வி சுஜிந்தா தனியார் கல்வி நிலையத்தில் நடைபெற்ற பரீட்சைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு தடைகள் ஏற்பட்டதனால் சந்நிதியானுடைய மதிய பூசையைமட்டுமன்றி மாலைப்பூசையையும் மனம் குளிரப்பார்க்கின்ற சந்தர்ப்பமும் சந்நிதியில் அன்னதானம் உண்ணக் கூடிய அரியவாய்ப்பும் கிடைத்து. மனதில் பெரிய திருப்தி ஏற்பட்டது என்பதையும் விபரமாக எழுதியுள்ளார்.

இவ்வாறு ஒரு பக்கம் திருப்தி ஏற்பட்டாலும் தனியார் கல்வி நிலையத்தில் நடைபெற இருந்த பரீட்சைக்கு அனைவரும் தோற்றுவது அவசியமானதென கண்டிப்புடன் செயற்படுகின்ற அந்த ஆசிரியர் கண்டிப்புடன் கூறியிருந்தும் பரீட்சைக்கு சமூகமளிக்காததினால் ஏற்படப் போகும் விளைவுகளையிட்டு அந்த மாணவி மிகவும் கலக்கமடைந்து காணப்பட்டார். ஆனாலும் அதனை எவ்வாறு எதிர்வுகொள்ள முடிந்தது என்பதை அவர் பின்வருமாறு கூறுகின்றார்.

---

★ கொடுப்பதை விட, கொடுக்கும் முறையே முக்கியமானது. ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" — ... அடுத்தநாள் அதிகாலை ஆறுமணி வகுப்பு எங்களுக்கு மட்டுமே நடக்கின்றது. அதற்கு நான் பயந்து பயந்தே சென்றேன். ஆசிரியர் வகுப்பிற்கு வந்தார். பரீட்சைக்கு வராத மாணவர்களை எழும்புமபடி கூறினார். நானும் இன்னும் சில பிள்ளைகளும் எழுந்து நின்றோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணம் கூறினார்கள். இவற்றைக் கேட்ட ஆசிரியர் நல்ல சாட்டுச் சொல்லுங்கள் என்றபடி இறுதியாக என்னிடம் வந்தார் ஏன் பரீட்சைக்கு வரவில்லை என்று கேட்டார். கோயிலுக்கு சென்றிருந்தேன் எனக்கூறினேன். அவர் ஒன்றுமே கூறாமல் சரி இருங்கள் என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். என்னுடன் படித்த மாணவிகளுக்கு ஒரே ஆச்சரியம் அவர்கள் எனக்குக் கூறினார்கள் இன்றைக்கு உனக்கு அடிதான் விழும் என்று நினைத்தோம் ஆனால் ஆசிரியர் பேசாமல் போய் விட்டாரே! "

இவ்வாறு தனது அனுபவத்தை குறிப்பிட்டுள்ள இந்த மாணவி சந்திரிகா தனது வேண்டுதலை நிறைவேற்றி, தனது துன்பத்தைப் போக்கியது போலவே தமிழ் மக்களது துன்பங்களையும் போக்கி அவர்களுக்கும் உதவுவான் என்ற நம்பிக்கையுடன் அதனை நிறைவு செய்துள்ளார்.

பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்ற பிள்ளைகள் ஒழுங்கு, ஒழுக்கம், கீழ்ப்படிவு, அடக்கம், நன்றி மறவாமை போன்ற பண்புகளை கடைப்பிடித்து நடப்பது அவசியமானதாகும். இத்தப்பண்புகளுடன் இவர்கள் இறைநம்பிக்கையும் உள்ளவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் தமது கல்வியில் பல முன்னேற்றங்களை அடைவதுடன் தம்மை எதிர்நோக்கும் பிரச்சனைகளையும், தடைகளையும் இறைநம்பிக்கையுடன் எதிர்கொள்ளக்கூடிய பக்குவமும் ஏற்படுமென்பதை செல்வி சுஜித்தாவின் அனுபவம் எமக்கு எடுத்துக்காட்டுகின்றதல்லவா.

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்

எவன் ஒருவன் பரமானந்த சமுத்திரத்தில் மூழ்குகிறானோ அவன் கங்கையிலுள்ள பெரிய மடுவில் மூழ்கிக்கிடக்கும் நீர் நிறைந்த இடம் போல் உள்ளேயும், வெளியேயும் ஆனந்தம் நிறைந்தவனாக இருக்கிறான்.

பயம் தான் மிகப்பெரிய பாவம்

நூற்றாண்டு காணும்

# பண்டிதமணி கணபதிப்பிள்ளை

அவர்களின்

# வாழ்வும் பணியும்

கற்றார் விளையும் கற்பகதரு தருவிற் கனியே கனியினி லூறும் சுவை நறவே கருவியே உறுமலையே மற்றாரும் புகழ் மாண்பே மவில் மட்டுவில் நகர்வாழ் வண்டமிழ முதமதி பண்டிதமணியே ''வாழிய வாழியவே'' கற்பனையின் எல்லையாகவும் சொற்பொழிவுத் தென்ற லாகவும் யாழ்ப்பாணத்தின் ஒளி விளக்காகவும் இருந்த மகாலிங்கசிவம் அவர்களையும் அவரின் தந்தையையும் உரையாசிரியர் எனப் பெயர் பெறறவரும் ஈழமண்டல சதகம் இயற்றியவரும் சிதம்பர நாவலர் பாட சாலையிலே முதன்மை ஆசிரியராய் இருந்தவருமாகிய ம. க. வேற்பிள்ளை அவர்களை ஈன்றெடுத்த பெருமைபெற்ற மட்டுவிலிலே உரையாசிரியர் குடும்பத்திலே சின்னத்தம்பி வள்ளியம்மைக்கும் ஏகபுத்திரனாக 1899-ம் ஆண்டு ஆனி மாதம் 14-ந் திகதி செவ்வாய்க்கிழமை சதயநட்சத்திரத்தில் இரவு பதினொரு மணியளவில் தமிழ் உலகில் ஒரு தாரகை உதயமானது.

பண்டிதர் ஐயா என அழைக்கப்பட்டார். அவர்களுக்குத் தமிழ் மீதும் சைவத்தின் மீதும் உண்டான பற்று அவரது பரம்பரை இரத் தத்தில் ஊறிய தந்தை வழியாக வந்தது. தருமர் என்று ஊரிற் செல் லமாகச் சின்னத்தம்பியரை அழைப்பார்கள். தருமர் கல்விபறிவு குறைந் தவராயினும் புராண இதிகாச கதைகளைச் சுவையாகச் சொல்லுவர். தருமர் மிகச்சில ஆண்டுகள் மட்டுமே தம் மனைவியோடு வாழ்ந்தவர். கணபதிப்பிள்ளை சிறுவனாய் இருந்த போதே தருமர் தபுதாரன் ஆனார். ஆனால் அவர் மீண்டும் விவாகம் செய்து கொள்ளாமல் தமது மகனை அருமையோடு வளர்த்து வந்தார். சிறுவன் கணபதிப்பிள்ளையின் ஆரம் பக்கல்வி பிறந்த ஊராகிய மட்டுவிலில் சந்திரமௌலீச என்னும் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலையிற் புகட்டப்பட்டது. ஆரம்பக்கல்வி ஐந்தாம் வகுப்போடு நின்றுவிட தந்தையார் மகனைக் கூட்டிக்கொண்டு தன் சொந்த ஊரான தனங்கிளப்பிற்கு வந்தார்.

தனங்கிளப்பிற் படிப்பதற்கான வசதிகள் அக்காலத்தில் இல்லை. தமது பெரும் பொழுதைத் தந்தையாரோடு வயல் வேலைகள் செய்வ திற் செலவிட்டு வந்தார். கல்வி கற்கவேண்டுமென்ற தாகம் அவர்

★ உரத்துப்பேசல், சண்டையிடல், வழக்காடல் கூடாது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தே இருந்த போதிலும் எதுவும் செய்ய முடியவில்லை. கணபதிப் பிள்ளைக்குக் கிராம விளையாட்டுக்களான கிளித்தட்டும் வண்டிச் சவாரியும் விருப்பமுள்ள விளையாட்டுக்களாயின. வண்டியிற் பூட்டிய காளை மாட்டோடு கடைக்கிட்டி பிடித்துக்கொண்டு ஓடுகின்றால் அவருக்கு அல்வா சாப்பிடுவது போல இருக்குமாம். இப்படியாகத் தனக்கிஷ்டமான விளையாட்டுச் சிறுவனாக வளர்ந்து பதினெட்டாம் பராயத்துக் கட்டிளங்குமரப் பருவத்தை அடைந்தார். நாடகம், பாட்டு விளையாட்டிலெல்லாம் இவருக்கு ஆர்வம் அதிகம் என்று சொல்லுவார்கள்.

பட்டினத்திற்குப் போகும் போதெல்லாம் இவருடைய நண்பர்கள் படிக்கச் செல்வதைப் பார்த்து இவரது ஆசையும் பெரியதொரு கால் கொண்டது. புதுத்தொரு காங்கேசன்துறைக்கும் அவருடைய கனவுகளை நனவாக்க அவரது ஆபத் நண்பர் நடராஜா என்பவர் இந்து சாதனப் பத்திரிகை விளம்பர மொன்றை அவரிடம் காட்டினார். அதன்படி, நாவலர் பாடசாலையிலுள்ள காவிய வகுப்பிற் சேர்ந்து படித்தார். அங்கே அன்பு, வல்லிபுரம் ஐயர் ஆர்வமுள்ள மாணவர்களுக்குத் தமிழ்க்கல்வி ஊட்டி வந்தார்கள். அங்கேதான் மட்டக்களப்பு புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்களும் பிரம்மஸ்ரீ குருமூர்த்தி அவர்களும் அவரோடு கல்வி கற்றார்கள்.

அக்காலத்திலே யாழ்ப்பாணத்திலே தமிழ்ப் பேரறிஞர்களாக விளங்கிய நாவலர் மருகரான கைலாசபிள்ளை அவர்களிடமும் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரிடமும் தமிழை முறையாகக் கற்று மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பண்டித பரீட்சையில் 1925 ஆம் ஆண்டு தேறினார். இடையில், சிதம்பர வித்துவான் சுப்பையா பிள்ளையிடம் பேரிலக்கண இலக்கியங்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் பெற்றார். இவர் தாம் கற்ற பெரியார்களிடம் கல்வியை மட்டுமன்றி அவர்களுடைய வாழ்க்கை முறைகளையும் கற்றுக்கொண்டார். அதனால் தான் பண்டித மணியிடம் கைலாசபிள்ளையின் கனதிபோக்கும் விடாதும் புலவர் அவர்களின் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் கண்டனரும் ஒட்டிக்கொண்டன. பரீட்சை எழுதாத பண்டிதர் மகாலிங்கசிவம் தமிழ்ப் பயிற்றுவித்த கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். திருநெல்வேலிச் சைவ ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலே ஓய்வு பெறும்வரை தமிழ் விரிவுரையாளராக விளங்கினார்.

கலையுணர்வுப் பெருக்கோடு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தமை மாத்திரமன்றி, கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் இலக்கியச் சொற்பொழிவாளராகவும் விளங்கினார்.

பொறுமை கொண்டோரே அல்லல் கொண்டோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி அவர்கள் அர்ப்பண சிந்தையோடு பிரமச்சரியத்தைக் கடைப்பிடித்துத் தமது ஆசிரியப் பணியைச் செம்மைப்படுத்தினார். இவரது பணியின் முற்பகுதியில் இலக்கிய இரசனையை அள்ளிச்சொரிபவராகவும் பிரபல கண்டன வாதியாகவும் இலக்கிய அரசியற் பேச்சாளராகவும் விசேட மலர்களுக்கு எழுதும் எழுத்தாளராகவும் இருந்தார்.

பணியின் பிற்பகுதியில் வைதிக சைவசித்தாந்தியாகவும் சமயப் பணியாளராகவும் பணியாற்றி இருக்கிறார். தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகவே தருமநெறியிலே சென்று மெய்ப்பொருளை ஆராயும் பேறு இவருக்குக் கைவரப்பெற்றமை முன்னைப் பிறவிப்பயனே என்றே சொல்ல வேண்டும்.

பண்டிதமணி அடிமைப்பட்டுக் கிடந்த இலங்கையின் வாலிபகாங்கிரஸில் இருந்து அரசியற் போராட்டம் நடாத்தி இருக்கிறார். அக்காலத்து அரசியல் வாதிகளோடு மேடையில் முழங்கியும் இருக்கிறார். தேசிய அரசியல் தலைவர்களை வேறுபாடின்றி வரவேற்றிருக்கிறார். இப்படி அவரது சேவை பல துறைகளிலும் பற்றிப்படர்ந்து காணப்பட்டது. இவருக்குக் கல்கி அவர்கள்தான் பண்டிதமணி என்ற பட்டத்தைத் தமது பத்திரிகைமூலம் வழங்கிப் பிரபல்யப்படுத்தினார். இலங்கைப் பல்கலைக்கழகம் இவரை இலக்கியகலாநிதி ஆக்கி மகிழ்ந்தது நல்லைநகர் ஆறுமுகநாவலரின் யாழ்ப்பாணத்திற் கந்தபுராணக் கலாச்சாரத்தையும் சைவத்தையும் பேணி நடாத்திய பெருந்தகைப் பண்பாளராய் விளங்கியவர் 1986 ஆம் ஆண்டு சிவனடியில் வீற்றிருக்கும் சிவானந்தப் பேறு பெற்றுச் சிவனருட் செல்வரானார். பண்டிதமணியால் எழுதப்பட்டு இதுவரை வெளிவந்த எழுபத்திமூன்றிற்கும் மேற்பட்ட நூல்களையும் கற்றுத்தெளிந்து பொன்னே போற் போற்றுவது ஒவ்வொரு தமிழ் மகனினதும் கடமை ஆகும். அதுவே, நாம் அவருக்குச் செய்யும் மரியாதையும் உபகாரமுமாக இருக்கும்.

நன்றி.

சு. சிவராசா ( ஆசிரியர் )

தனி மனிதன் எவ்வளவு ஆற்றல் உடையவனாக இருந்தாலும் ஆபத்தான காலத்தில் உறவினர் உதவியின்றி நிலைத்து நிற்க முடியாது.

★ கோபம் களை போன்றது; வெறுப்பு மரம் போன்றது ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடரில் மலரும் மரபுக் கவிதைகள்

1. மூர்த்தி தலம் தீர்த்த முள்ள
முருக தலங் களிலே
முதன்மை யான செல்வச்சந்
நிதிமுருகன் பேரில்.

2. ஊர்த்துருகித் திரு, இரட்டை
மணி மாலை யொருவர்
இசைத்து விட்டார் மரபுக்கவி
இனிமைதரும் ஏடே.

3. கார்த்திகையிற் பூத்தவொரு
ஞானச்சுட ரதனில்
கனிந்தமர புக்கவிதை
கண்டு கண்டு களித்தேன்.

4. நேர்த்தியான மயங்கிசைக் கொச்
சகப்பாவில் யாத்த
நிகரில்லா அக் கவியை
நேர் நோக்கிப் படித்தேன்.

5. சீர்த்திரான்ன தரவுடனே
தாழிசைய ராகம்
சேர்த்து பின்பு மயங்கி வந்த
தாழிசையுங் கண்டேன்.

6. போர்த்தும் போர்த்தும் வந்தஅம்போ
தரங்கத்தனிச் சொல்லும்
போனிவந்த ஆசிரியச்
சுரிதகமும் படித்தேன்.

7. வார்த்தை சொல்ல முடியாமல்
வாய் பொத்தி நின்றே
வாய்ப்புடைய இலக்கணத்தின்
வரம்பினையுங் கண்டேன்.

நடக்க முடியாதது என்று இந்த உலகில் எதுவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. திர்க்கமுள மோனையையும்
எது கையையுங் கண்டேன்
சிறப்பான சொன்னயமும்
பொருணயமும் கண்டேன்.

9. ஆர்த்தபிறப் பறுத்தமணி
வாசகரைப் பற்றி
அடியொற்றி வாழ்ந்த திரு
சபாரத்ன சுவாமி.

10. கீர்த்திதனை யாத்தமுறை
கிருபையுடன் மகிழ்ந்தே
கிடுகிடென சுடர் படிப்போர்
கேட்க வரைந் தேனே.

11. கூர்த்த அறி வுப்புலவர்
தியாக ராஜர் மேலும்
குருவான சந்நிதியான்
பாதமலர் பாடி.

12. வீற்றிருக்க வேண்டுமென
யானுமிதைப் பாடி
விருந்தாக முன் படைத்தேன்
வேலவனைப் பணிந்தே.

புலவர் வை. க. சிற்றம்பலம்

## இல்லறம் ஒரு பயிற்சிக்களம்

"உங்கள் இல்லம் ஆண்டவன் வீடு; அந்த வீட்டின் யஜமானன் ஆண்டவன்" என்ற மனநிலையை வழக்கப்படுத்திக் கொண்டு இல்லறம் நடத்துங்கள். வழக்கப்பட்டதும் அதுவே மனதிற்குப் பண்பாக அமைந்து விடுகிறது.

இல்லறமும் வைராக்கியத்தைப் பயிலும் இடமாகும். சில சௌகரியங்களை அமைத்துக்கொண்டு துறவு மார்க்கத்தைப் பயிற்சி செய்வதே இல்லறத்தின் பயன். உள்ளத்தைப் பக்குவப் படுத்திக் கொள்வதற்குக் குடும்ப வாழ்க்கையை ஒரு பயிற்சிக் களமாக அமைத்துக் கொண்டு இல்லறம் நடத்துங்கள்.

உள்ளபடி கடைப்பிடித்தால் ஒவ்வோர் ஆச்சிரமமும் சிறந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானபண்டித கலாவித்தகி



ஈழத்திருநாடு பெற்ற இனிய அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் உலகம் முழுவதும் வாழும் இந்துக்களின் ஒப்பற்ற தலைமகளாக விளங்கும் அன்னையின் பவள விழாவை எதிர்வரும் 07-01-2000 அன்று மிகச் சிறப்பாக சைவத் தமிழ் உலகம் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

இரத்தாட்சி ஆண்டு மார்கழி மாதம் 24 ஆம் நாள் புதன்கிழமை (07 - 01 - 1925) இரவு 9-30 மணியளவில் மிருகசீரிட நட்சத்திரத்தில் [illegible] மாதவம் செய்த தவப்பயனால் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவதரித்தார். இவரது தந்தையார் பெயர் அப்பாக்குட்டி. தாயார் பெயர் தையற்பிள்ளை. ஞானக் குழந்தையாக சிறுவயதிலேயே விளங்கிய அம்மையார் தனது ஆரம்பக்கல்வியை தொடங்குவதற்கு முன் தெல்லிப் பழை துர்க்கை அம்பாள் ஆலயத்தில் ஏடு தொடக்கப்பெற்று அன்றே அம்பாளின் அருள் அரவணைப்புக்கும் ஆட்பட்டார். அம்மையார் மல்லாகம் அமெரிக்கமிஷன் பாடசாலையிலும், மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையிலும், அளவெட்டி சதானந்த வித்தியாசாலையிலும் கற்றுப் பின் இராமநாதன் உயர்கல்லூரியில் நடைபெற்ற ஆசிரிய கலாசாலையில் சிறப்புப் பயிற்சி பெற்றார். 1941-ம் ஆண்டு சேர். பொன். இராமநாதனின் மருகர் தமிழறிஞர் திரு. சு. நடேசபிள்ளை, திருச்சி ஏ. எஸ். சுந்தரராஜ ஐயங்கார் போன்ற பேரறிஞர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐயம் திரிபுறக் கற்றார். இராமநாதன் கல்லூரி விடுதிச் சாலையில் மூன்று ஆண்டுகள் தங்கி இருந்து சிறந்த சைவத்தமிழ் இலக்கியங்களை அறிஞர்களிடம் பேரவாவுடன் கற்றுத் தேறிய அம்மையார்

நண்பர்களை தேர்ந்தெடுப்பதில் நிர ஆலோசிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த ஆசிரிய மாணவராகத் திகழ்ந்தார். சிறு பராயத்திலேயே பேச்சு, நாடகம், இசை போன்ற துறைகளில் தன் ஆற்றலை வெளிப்படுத்தி பரிசுகளை பெற்ற அம்மையார், ஆசிரிய பயிற்சிக் காலத்தில் புராண படனம், இலக்கியச் சொற்பொழிவு, திருமுறை ஓதல் ஆகிய நிகழ்ச்சி களில் கலந்து கொண்டு சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தினார். 1945 இல் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். பின் 1946-ல் மட்டக்களப்பு அர்ச் சிசீலியா ஆங்கிலப் பாடசாலையில் கடமையேற்று சிறந்த ஆசிரியராகப் பணியாற் றினார். 1949-ஆம் ஆண்டு முதல் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையில் தமிழ்த் துறையில் சிறந்த பேராசிரியையாக விளங் கினார். 1953 ல் பண்டிதத் தேர்வில் சிறந்த பேறுபெற்று பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி என்ற சிறப்புடன் சைவத் தமிழ் பணிகளில் முதன்மை பெற்றுத் திகழ்ந்தார். 11 ஆண்டுகள் கொழும்பில் ஆசிரியப் பணியாற்றிய அம்மையார் அவ்வேளை கொழும்பு விவேகானந்த சபை யில் சனி, ஞாயிறு தினங்களில் சிறந்த சைவத் தமிழ் வகுப்புக்களை நடாத்தி தலைநகரில் சைவத்தமிழ் மாண்பைக் காப்பாற்ற அரும்பணி ஆற்றினார். இவ்வேளையிலே கொழும்பு தட்டாதெரு முருகன் கோயில், ஜிந்துப்பிட்டி முருகன் கோயில் போன்ற இடங்களில் இவரின் சைவச் சொற்பொழிவுகள் சிறப்பு விழாக்களில் நடைபெற்று வந்தன. இவரது நாவன்மை கண்டு உரை நடக்கும் இடங்களில் மக்கள் கூட்டம் திரண்டது. 1956 ஆம் ஆண்டு சிவராத்திரி தினத்தில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு மத்தியில் திருக்கேதீஸ்வரத்தில் இவரது உரை இடம் பெற்றது. பலரும் இவரது உரையைப் பாராட்டி மெச்சினர். இலங்கை வானொலி இவரது உரையை அஞ்சல் செய்தது. இலங்கை முழுவதும் தங்கம்மா அப்பாக் குட்டி என்ற நாமம் நன்கு பரவியது. கொழும்பில் தமிழக அறிஞர் களது முன்றிலில் தன் பேராற்றலை வெளிப்படுத்திய அம்மையாரை அறிஞர் கூட்டம் அகமகிழ்ந்து பத்திரிகைகளில் பெருமைப்படுத்தியது. சைவ சித்தாந்தத்திலும் அறிவாளியாகிய அம்மையார் 1958 இல் சைவப்புலவர் தேர்வில் சித்திபெற்று விளங்கினார். 1958 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தோடு இவர் யாழ்ப்பாணம் அளவெட்டி சதானந்தவித்தி யாசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்தார். யாழ்ப்பாணச் சைவ உலகம் அம்மையாரின் வருகையால் பெரும் பயன் பெற்றது. 1962 ஆம் ஆண்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய நிர்வாகப் பணியில் இணைந்து கொண்டு யாழ் குடாநாடு எங்கும் இனிய சொற்பொழிவு களை ஆற்றி மக்களுக்கு வழி காட்டினார். இவரது நாவன்மையால் ஈழத்துத் திருத்தலங்களில் சீர்திருத்தங்கள் பல உருவாகின என்பதைப் புகழ் பூத்த ஈழத்துக் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் தனது நூலில் பின்வரும் செய்யுள் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

---

★ முறை சரியாக இருந்தால், முடிவும் சரியாகவே இருக்கும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவரை அடக்க வல்ல ஆற்றலைத்தரும் நின்பேச்சு
பொய்மையை போக்கவல்ல புத்தியை தரும் நின்பேச்சு
செய்வதை தெளிய வல்ல செம்மனம் தரும் நின்பேச்சு
தெய்வநல் வாழ்வை ஏற்றும் செல்வி தங்கம்மா வாழி.

மின்னொளி எங்கள் வேண்டாம் சிறுகளியாட்டம் வேண்டாம்
வன்னவான் சிகரம் வேண்டாம் வாணவேடிக்கை வேண்டாம்
மன்றுபேர் தங்கம்மாவை வரவழைத்திடுக வென்பார்
இன்னதோர் மாற்றம் நேர எழுந்தனை இனிதே வாழி.

என்று பாடலுக்கு அமைய குடா நாட்டில் அம்மையாரை அழைத்து புராண இதிகாசக் கருத்துக்களைக் கேட்பதில் மக்கள் ஆவல் கொண்டனர்.

1964 ஆம் ஆண்டு தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று உயர்வகுப்பு மாணவர்களுக்கு தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய அம்மையார் பல மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு வழிகாட்டினார். அம்மையாரிடம் கற்ற பல மாணவர்கள் இன்று மிக உயர்ந்த பதவிகளில் சிறந்து விளங்குகின்றனர். 1965 இல் பாரத தேசத்தில் முதன்முதலாக தென்னாட்டவரின் அரங்குகளில் அம்மையாரதுரை இடம் பெற்று தமிழகத்து அறிஞர்களின் பெரும் பாராட்டைப் பெற்றது. தொடர்ந்து தமிழகம் அம்மையாரை அழைத்துப் பேரறிஞர் அவைகளில் பெருமைப்படுத்தியது. 04-10-1966 ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் "இளங்கோ போற்றிய பெண்மை" என்னும் பொருள் பற்றிய பேச்சு பெரும் பாராட்டை ஈழத்தமிழருக்கு ஏற்படுத்தித்தந்தது.

1973 ஆம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீனம் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியை அழைத்துக் கௌரவித்தது. ஆதீன முதல்வர் அம்பலவாண தேசிகர் அம்மையாரின் ஆற்றலைப் போற்றி, திருவிடை மருதூரில் நடைபெற்ற சைவ மங்கையர் மாநாட்டுக்கு தலைமை தாங்கும் பொறுப்பை வழங்கினார். தொடர்ந்து தருமபுரம் ஆதீனம், கரிதாசகிரி சுவாமிகள் போன்ற ஞானமுதல்வர்களின் அழைப்பைப்பெற்று தென் நாட்டில் நாவலருக்குப்பின் சைவ உலகத்தால் பெருங் கௌரவம் பெற்ற வரலாற்று நாயகியாக அம்மையார் இன்றுவரை திகழ்கிறார். பல தடவைகள் பாரததேசத்தில் தன் பேராற்றலை வெளிப்படுத்தி பல்வேறு கௌரவங்களை அம்மையார் பெற்றார். மலேசியா, சிங்கப்பூர், இலண்டன் போன்ற நாடுகளுக்கும் சென்று அம்மையார் பல நூறு சொற்பொழிவுகளை ஆற்றி பெரும் புகழ்பெற்றார்.

வலிமை உடல் பலத்தால் அல்ல; மனஉறுதியிலே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய 5000 இற்கும் மேற்பட்ட சிறப்புச் சொற்பொழிவுகளை ஆற்றி மங்கையர்க்குத் தனியரசியாக விளங்கும் அன்னை பல்வேறு சமய நிறுவனங்களால் பல பட்டங்கள் வழங்கப்பெற்று பாராட்டப்பட்டார். மதுரைஆதீனம் முதல் சந்நிதியான் ஆச்சிரமம் வரை அம்மையாருக்கு பல சிறப்புப் பட்டங்களை காலத்துக்கு காலம் வழங்கின. 1998 இல் யாழ் பல்கலைக்கழகம் கெளரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியது.

காசியாத்திரை முதல் பலநூறு தலயாத்திரைகளை மேற்கொண்ட அம்மையார், 1977 முதல் துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவராகப் பதவியேற்று ஆலயத்தை சமுதாயப் பணிகளோடு இணைத்து பெரும் பணியாற்றி வருகிறார். அவரது அயரா முயற்சியால் ஆலயம் இன்று உலகப்பிரசித்தி பெற்ற தலமாக விளங்குகிறது.

1982 ஆம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை ஆரம்பித்த அம்மையார் பல ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்கு தாயாக விளங்கி அவர்களின் வாழ்வை ஒளியேற்றிக் காத்துவருவதை உலகம் வியந்து போற்றுகிறது. அம்மையாரின் சமய, சமூகப் பணிகள் மிக அகலமானவை. நல்லூர்க்கந்தன் வீதியில் மிகப்பிரமாண்டமான ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தை உருவாக்கி சமய விழாக்களையும், அன்னதானப் பணிகளையும் விரிவுபடுத்தியுள்ளார்.

அகவை 75 நிறைவு பெற, எங்கள் ஆன்மீகத்தாயாக விளங்கும் சிவத்தமிழ்ச் செல்வியின் பவளவிழாப் பொலிவை உலகம் முழுவதும் வாழும் சைவத் தமிழர்கள் கொண்டாடி மகிழ்வதற்குப் பல்வேறு ஏற்பாடுகளைச் செய்தவண்ணமுள்ளனர். இலண்டன் மாநகரிலும், கனடா மாநகரிலும், சுவிஸ்லான்ட் நாட்டிலும், இலங்கையின் பல பாகங்களிலும் அன்னையின் பவளவிழா இனிது நடைபெற அன்பர்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர். இலங்கையில் வெளிவரும் சகல தமிழ்ப் பத்திரிகைகளும் புலம்பெயர்ந்து மக்கள் வாழும் நாடுகளில் வெளிவரும் சஞ்சிகைகளும் அன்னையின் பவளவிழாவை முன்வைத்து சிறப்பு மலரினை வெளியிடஉள்ளார்கள்.

சிவத்தமிழ்ச் செல்வியின் பவள விழாவை முன்வைத்து ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான ஆலய அருகாமையில் “சிவத்தமிழ்செல்வி அன்னையர் இல்லம்” என்ற முதியோர் இல்லத்தை பவளவிழா ஞாபகமாக ஜனவரி 7 ஆம் திகதி தொடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 50 வயதிற்கும் 70 வயதிற்குக் இடைப்பட்ட ஆதரவற்ற பராமரிக்க வசதியற்ற பெண்கள் இவ் வில்லத்தில் தங்கி வாழ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பவளவிழாவை முன்னிட்டு “ துர்க்கா துரந்தரி சைவத் தமிழ் ஆய்வு

---

★ அதிகமான பழக்கம் அவமரியாதையைத் தரும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்" திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு நூலகத்தில் கிடைத்தற்கரிய நூல்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அன்னையின் பவளவிழாவை முன்னிட்டு அறிஞர்களின் ஆக்கங்களைக் கொண்ட சிறப்பு மலர் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அம்மையாரால் எழுதப்பட்ட கந்தபுராணச் சொற்பொழிவுகள் என்னும் சிறப்பு நூல், பவளவிழாவில் மறு பதிப்புச் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. தன்னை அர்ப்பணித்து சமூகத்துக்காக வாழும் அன்னை பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் எனச் சைவ உலகம் பிரார்த்தித்து வாழ்த்திய வண்ணம் உள்ளது. பவளவிழாவை அறநெறி விழாவாகக் கொண்டாட அன்பர்கள் பல ஏற்பாடுகளையும் பல இடங்களிலும் ஏற்படுத்தி வருகின்றனர். பவளவிழா இனிதே நடைபெற கனியினுமினிய கடவுள் அருள்புரிவாராக.

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்

---

## எது தியானம்?

ஐம்புலன்களை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி செய்கின்ற தியானம் ஒரு மனிதனை பல்வேறு வகையில் பக்குவப்படுத்தி ஆத்மீக வீடுபேற்றுக்கு அவனை இட்டுச்செல்கின்றது என்பதை அனுபவரீதியாக நாம் எல்லோரும் உணருகின்றோம். ஆனால் இவ்வுலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது நம்மொவ்வொருவரும் தங்கள் நிலைகளிலிருந்து ஆற்ற வேண்டிய கடமைகளைத் தவிர்த்து தியானம் செய்வதை எமது சமயம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைநாம் பல சமயப்பெரியார்களின் அனுபவங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

பல சமயப்பெரியார்களும், மகான்களும் தாம் அன்றாடம் மேற்கொண்டு வந்த தியானங்களைக் கூட தியாகம் செய்து தமக்கு வழங்கப்பட்ட கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்து தமது கடமைகளையே தியானமாகக் கருதிச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் பலவற்றை நாம் காணுகின்றோம்.

ஆகவே உலகியலில் உள்ள சராசரி மனிதர்கள் தங்களது கடமைகளை தர்ம நெறியில் நின்று செயற்படுத்துகின்ற பொழுது அதுவே தியானமாக அமைந்து விடுகின்றது. இன்றைய சமூகத்திற்கு இதுவே தேவையாகவும் உள்ளது எனக் கூறலாம்.

மலர் வெளியீட்டில்
இலங்கை வங்கியில் கடமையாற்றும்
திரு. ம. ஆனந்தநடேசன்

---

கொடியவர்களோடு சேரக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 - 12 - 19 இல் நடைபெற்ற

## திருவாசகவிழாப் போட்டியில் வெற்றியீட்டிய

### மாணவர்களின் விபரம்

**ஆண்டு 6 - 7**

1-ம் இடம் செல்வி துஷ்யந்தி ரகுநாதன்
(கொக்குவில், தலையாளி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை)

2-ம் இடம் செல்வி மீராஜினி சிவபாதசுந்தரம்
(கொக்குவில், தலையாளி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை)

3-ம் இடம் செல்வி கிருஷ்ணப்பிரியா கோபாலகிருஷ்ணன்
(உடுப்பிட்டி, இமையாணன் அ. த. க. பாடசாலை)

**ஆண்டு 8 - 9**

1-ம் இடம் செல்வி பிரபாலினி சிவஞானம்
(யாழ் / தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்)

2-ம் இடம் செல்வி தர்ஷிகா நாகேந்திரம்
(மகாத்மா வீதி, நெல்லியடி)

3-ம் இடம் செல்வி ஜீவிதா செல்வரெத்தினம்
(கொக்குவில், தலையாளி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை)

**ஆண்டு 10 - 11**

1-ம் இடம் செல்வன் செல்வரெத்தினம் செந்தூரன்
(கொக்குவில், தலையாளி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை)

2-ம் இடம் செல்வி சுகாசினி மகாலிங்கம்
(யாழ் / தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்)

3-ம் இடம் செல்வி தாட்சாயினி விஸ்வநாதக்குருக்கள்
(யாழ் / விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)

★ பிரம்மஞானம் அடைவதே உண்மையான இலாபமாகும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் நமசிவாய

# சங்கம வழிபாடு

உலகிலுள்ள சமயங்களிலே பழமையானதும் மற்றைய சமயங்களுக்கு மூலமாகவும் விளங்குவது சைவசமயம். சைவ சமயமானது உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டது. வெறுமனே இவ்வுலக வாழ்க்கையைப் பற்றி சிந்தியாது மறுமை பற்றியும் சிந்தித்துள்ளது. ஆன்மாக்களின் இறுதி இலட்சியமாக ஆன்ம ஈடேற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆன்மா தன்னைப் பிடித்துள்ள வினைகளிலிருந்தும் விடுபட பல்வேறு வழிவகைகளையும் கூறியுள்ளது. இந்து சமயத்தின் முதநூலாக விளங்குகின்ற வேத ஆகமங்களில் பல வழிபாட்டு முறைகளை எடுத்துக் கூறியிருக்கக் காண்கிறோம். அந்த வகையில் ஆகமங்கள் முக்திக்குரிய சாதனங்களாக சைவ நாற்பாதங்கள், குரு, லிங்க, சங்கம வழிபாடு, திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாட்சர ஜெபம் என்பவற்றைக் கூறியுள்ளது. இங்கு சங்கம வழிபாடு பற்றி நோக்குவோம்.

சங்கமம் என்றால் சிவனடியார் கூட்டம் என்று பொருள். சிவனது அணுக்கத்தொண்டர்களே சிவனடியார்கள்.

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப்படும்."

என்ற குறளிற்கேற்ப எமது சமயம் மனிதனும் தெய்வமாகலாம் என்ற கோட்பாடுடையது. இவ்வகையில் சிவவேடத்தையும் அவர்களது தூய அன்பையும் சிவனடியார்களையும் சிவமாகவே வழிபடலாம் என மெய்கண்ட சாஸ்திர நூல்களில் தலைநாயகமாகத் திகழும் சிவஞான போதத்தின் 12 சூத்திரம் குறிப்பிடுகின்றது.

செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே.

★ உண்மையான பக்தன் யார் என்று கடவுளுக்குத் தெரியும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்து கடவுண் மாமுனிவரின் திருவாதவூரடிகள் புராணத்தில் திருப்பெருந்துறைச் சருக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

நிர்வாணதீட்சிதர், விசேடதீட்சிதர், சமயதீட்சிதர் என முத்திறமான சிவபக்தர்கள் காணப்படுகின்றார்கள்.

சிவபெருமான் ஆலயங்களில் இருப்பது போன்றே சிவனடியாருடைய உள்ளத்திலும் இருப்பார். இக்கருத்தையே இந்துக்களின் மூல இலக்கியமான வேத உபநிடத மகா வாக்கியங்கள் எடுத்துக் கூறுகிறது. " தத்துவமஸி, அகம்பிரமாஸ்மி, சோகம்அஸ்மி " என்பவை பற்று நீங்கிய அடியாரையும் தெய்வத்தையும் ஒன்றெனவே குறிப்பிடுகின்றது. இவற்றை சிவாகமங்களின் யோகா, ஞானா, பாதக்கருத்துக்களும் குறிப்பிடுகின்றது. இதனாலேயே ஒருவரை வணங்கும் போது வணங்கப்படுபவர் இவ் வணக்கம் என்னை அல்ல எனக்குள்ளே இருக்கும் இறைவனுக்கென்று நினைக்க வேண்டும் என்பதாகும். இதையே பின்வரும் குறட்பாவும் காட்டுகிறது.

" உன்னை ஒருவர் வணங்கில் உனதுள்ளுறையும்
நின் மலனுக் கென்றே நினை. "

இதற்கும் மேலே ஒருபடி உயர்ந்து ஔவைப் பிராட்டியார் சிவன் தொண்டருக்குள் ஒடுக்கம் ஆதலால் தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே எனக் குறிப்பிடுகின்றார் என்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது.

இச் சிவனடியார்களை நோக்கும் போது புறத்திலே காவிவஸ்திரத்தையும், சிவசின்னங்களாகிய திருநீற்றையும், ருத்திராக்கத்தையும் உடம்பிலே தரித்திருப்பர். சிவனது உண்மையை நினைத்தாலும், கேட்டாலும், கண்டாலும் தம்வசம் சிவனை இருத்தி ஆனந்த அருவி பொழிதலும் விம்மலும் நாத்தழுத்தலும் உரைதடுமாறலும், ஆடலும், பாடலும் உடையவராய் விளங்குவார்கள் இவ் அடியார்கள் சிவனிடம் செலுத்தும் அன்பு முத்திறத்தது. சிவனது திருவருளைப் பெற்ற இடத்து மாத்திரம் பரவசப்படுதல் கடையாய அன்பாகும். சிவனது திருவருளை கண்டமாத்திரத்தில் பரவசப்பட்டு நிற்றல் இடைத்தரமான அன்பாகும் சிவனை நினைத்தளவிலும், சிவன் புகழை கேட்டளவிலும் பரவசப்பட்டு நிற்றல் முதல் தரமான அன்பு நிலை ஆகும்.

[ தொடரும் .........

செ. கந்த சத்தியதாசன்
B. A. (Hons.)

தீய செயல்களில் ஈடுபடுபவர்களுடன் பழகுதல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART 23

## CONVERSATIONS

1. Mohan — We're leaving
   Ranjith Wait for me
   Mohan — Hurry up. We will be late.
   Ranjith — Okay, Okay. I am ready let's go

2. Ravi - (knock, knock) May I come in sir.
   Professor — Certainly, come in. Have a seat.
   Ravi — Thanks.
   Professor — How can I help you?
   Ravi — I need to ask a Question about Yesterday's lecture sir
   Professor — Okay, what's the question?

3. Mala — What is the matter with you?
   Suseela — I have a hiccups
   Mala — Hold your breath.
   Selvy — Drink some water.
   Rosy — Breath into a paper bag
   Meena — Eat a piece of bread
   Suseela — It's okay The hiccups are gone.

4. Ram — Good morning uncle
   Uncle — Good morning. How all at home

பிறர் உழைப்பில் வாழ்பவன், சமூக ஒட்டுண்ணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ram — Thanks. All are fine but brother Murali is very naughty as he is the pet at home. By the way we were expecting you for the Deepawali and we were all disappointed.

Uncle — Sure, Dont you know the difficulty in booking an air ticket during festival days. Why you didn't bring Murali with you?

Ram — He is afraid of the Shelling.

Uncle — Dont take the risk. I shall visit your home this evening. I have brought some Presents for you and Murali

Ram — what are the Presents?

Uncle — I won't tell now. Better you guess them

Ram — Well, where is cousin Sundar?

Aunty — He has gone to see a Cricket match at the Central College ground. He will come now as it is time for lunch.

Uncle — why don't you have the lunch with us today

Aunty — It will be interesting if you join us

Ram — I don't mind but my mother will be worried. By the present situation in Jaffna.

Uncle — We have telephone, better talk to your mother,

Ram — Okay Thanks.

S. Thurairajah
( English Tutor )

சிக்கனமாக இருப்பது ஒரு தலைசிறந்த அறச்செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத வாராந்த நிகழ்வுகள்

07 - 01 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை:- திரு. ச. சிவகுமாரன் ( கிராம உத்தியோகத்தர், மானிப்பாய் )
**விடயம்:- " பக்திப்பாடல் "**
வழங்குபவர்கள்:- விழிப்புலனற்ற மாணவர்கள் ( வாழ்வகம், மானிப்பாய் )
( பக்கவாத்திய சகிதம் )

---

14 - 01 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்
அறிமுகவுரை: திரு. ஆ. வடிவேல் ( அதிபர், சக்கோட்டை )
**சொற்பொழிவு: " அஞ்சும்முகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும் "**
வழங்குபவர்: திரு. கோ. சி. வேலாயுதம் ( முன்னாள் கல்விப்பணிப்பாளர் )

---

21 - 01 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை: திரு. சி. சி. வரதராசா J. P.
( பொதுச்செயலாளர் இந்து இளைஞர் பேரவை / யாழ் )
**சொற்பொழிவு: " முருகன் பெருமையும் இறை தொண்டும் "**
வழங்குபவர்: செல்வன் நா. நவராஜ்
( உயர்தர வகுப்பு மாணவர் கொழும்புத்துறை )

---

28 - 01 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்
அறிமுகவுரை: இசைமணி சி. துரைராஜா ( பேரவை உறுப்பினர் )
**விடயம்: " பண்ணிசை "**
வழங்குபவர்: திரு. சி. தில்லைமணி
( நல்லை ஆதீன ஓதுவார் ) ( மின்சாரப்பகுதி )
வயலின்:- பிரம்மஸ்ரீ ப. தியாகராஜக் குருக்கள்
மிருதங்கம்:- வித்துவான் ச. ஹரிகரன்

---

30 - 01 - 2000 ஞாயிற்றுக்கிழமை

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# தை - 2000

வெளியீட்டுரை: செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்
( ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி )
மதிப்புரை: கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
( வரவு ஆய்வாளர், கக்சுயின் பல்கலைக்கழகம், யப்பான் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் கவனத்திற்கு

முதல் பத்து மலரிலும் வெளியிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக நடைபெற்ற வாசகர் போட்டிக்குரிய பெறுபேறுகள் வரும் (2000) தை மலரில் இடம்பெறும் என்பதையும் அவர்களுக்குரிய பரிசுகள் தை மாத மலர் வெளியீடு (30 - 01 - 2000) ஞாயிற்றுக்கிழமை அன்று வழங்கிக் கௌரவிக்கப் படுவார்கள் என்பதையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org